விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 28 செவ்வாய்க்கிழமை (13.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 330

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO


# ஈழத்தமிழர் பொதுவாக்கெடுப்பிற்கு இந்தியா ஆதரவு திரட்ட வேண்டும்!



## காங்கிரஸை உலுப்புகிறார் கருணாநிதி

(டில்லி)

ஈழத்தமிழர் எதிர்காலம் குறித்து பொதுவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு இந்தியா ஆதரவு திரட்டினால்தான் இந்தியாவில் மத்திய ஆளும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு தி.மு.க. தொடர்ந்து ஆதரவளிக்க முடியும் என அக் கட்சியின் தலைவர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள் அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வலம்புரிக் குடும்பம்**

## மாபிளை விழுங்கிய குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் மாபிளை விழுங்கிய குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

அளவெட்டி டச்சு வீதிப் பகுதியில் இச்சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் நான்கு வயதினையுடைய கு.அருள்ராஜ் என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

குறித்த பிள்ளையிடம் விளையாடுவதற்காக மாபிளைக் (24ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் 10 ஆண்டுகளுக்கு பின்னர் நேற்று வழக்கு விசாரணை

(கொழும்பு)

இலங்கையின் வடக்கே பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க உள்ளிட்ட மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் நேற்று திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு அரச தரப்பு முன்வைத்த ஆட்சேபனையையும் உச்சநீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் விவசாயிகள் சிலர் இந்த வழக்குகளை 2003ஆம் ஆண்டில் தாக்கல் செய்திருந்தனர்.

பலாலி (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை–சீனா இராணுவ உறவு

(பீஜிங்)

சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் லியாங் கௌங்லிக்கும் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட உயர்மட்ட குழுவுக்குமிடையில் நேற்று முன்தினம் பீஜிங்கில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இவ்விரு நாடுகளும் இராணுவ உறவினை உறுதி செய்து ஒத்துழைப்பை அதிகரித்து நட்புறவை பேணுவதாகவும் – பாதுகாப்பு ஒத்துழைப்பை கட்டியெழுப்புவதாகவும் பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

சீனாவில் நடைபெறுகின்ற ஒன்பதாவது சர்வதேச விமான மற்றும் விண்வெளி கண்காட்சியில் கலந்துகொள்வதற்காக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சீனாவுக்கு விஜயம் (24ஆம் பக்கம் பார்க்க)

## கவர்ச்சிகரமான உறுதிமொழிகளால் அரசு மக்களை ஏமாற்றியுள்ளது

### பட்ஜெட்டை சாடுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

அரசாங்கம் தொழில் வர்க்கத்தினருக்கு கவர்ச்சியான உறுதிமொழிகளை வழங்கி இரண்டாயிரத்து 500 ரூபாய் வேதன அதிகரிப்பு வழங்க போவதாக கூறிவந்த போதிலும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் சொற்ப அளவிலான கொடுப்பனவே வழங்கப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி விசனம் தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

வரலாற்றிலேயே மிக அதிகமாக வழங்கப்பட்ட வேதனம் (23ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத இலங்கை பிரஜைகளை உடனடியாக திருப்பியனுப்புவோம்!

### அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவிற்கு படகுகள் மூலம் வரும் சட்டவிரோத இலங்கை பிரஜைகளை உடனடியாக திருப்பியனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு வருகைதருபவர்களுக்கு விஷேட கொடுப்பனவுகள் வழங்கப்பட மாட்டாது எனவும் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குடிவரவு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதுதவிர அபாயகரமான கடல் பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் எனவும் அந்த அறிக்கையில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலிய தெற்காசிய பிராந்திய குடிவரவு இயக்குநர் ஜோஸ் அல்வாரிஸ் நேற்று கொழும்பில் செய்தியாளர் சந்திப் (24ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடையில் நடந்தது மனிதப் படுகொலை அல்ல!

### இராணுத்தினர் தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்றது படுகொலை முயற்சி இல்லையென இராணுவத்தினர் மறுத்துள்ளனர்.

பொதுமக்களுக்கு உயிர் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் சிறைக் கைதிகள் நடந்து கொண்டமையினாலேயே அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

வெலிக்கடையில் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் மனிதப் படுகொலை என இலங்கையின் எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

எனினும் இதனை மறுத்துள்ள இலங்கை இராணுவப் பேச்சாளர் நுவன் வணிகசூரிய, களவாடப்

## பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைக் குழுவில் சம்பந்தன் இணைவு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கான உறுப்பினர் குழுவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் பங்கேற்பார் என அக்கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணையை ஆராயும் குழுவிற்கான தமது பிரதிநிதியாக விஜித ஹேரத்தை ஜனநாயக தேசியக் கூட்டணியும் நேற்று (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெலிக்கடை மோதல் குறித்து இலங்கை ம.உ. ஆணைக்குழு விசாரணை

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம் பெற்ற துப்பாக்கி மோதல் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணை நடத்தவுள்ளது.

இதற்கமைய ;சிறைச்சாலை உயரதிகாரிகளை ஆணைக்குழு முன்னிலையில் ஆஜர் படுத்தி விசாரணை நடத்தவுள்ளதாக ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மகாநாம தெரிவித்தார்.

மேற்படி சிறைச்சாலையில் கைதிகளுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை தவற விட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

பாரிய குற்றச் செயல்களை மேற்கொண்டவர்கள், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் விளக்கமறியல் கைதிகள் என இவர்களை வேறு வேறாக தடுத்து வைக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது என்றும் மனித உரிமை ஆணையாளர் மேலும் சுட்டிக் காட்டினார். (ந-11)

ஆசிரியர் முத்துலிங்கத்தின்
EASY ENGLISH
விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம்

செல்லா சினிமா- யாழ்ப்பாணம்


10.30
2.30
6.30
13ம் திகதி முதல் விஜயின்
துப்பாக்கி
ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

Computer Repairs at your Home or Office Step !
Island wide Service
We're undertaking-:
Assembling, Service & Maintenance.
Laptop Repairs.
ADSL Configuration.
Virus Solutions, Software Installation.
Computers & Computer Parts Sales & Delivery.
PC CARE
K.K.S ROAD, INUVIL
Ask for more - 0774767123,0212334004
E-mail us - servicedeptpccare@gmail.com

# ஈழத்தமிழர் பொதுவாக்கெடுப்...

மேற்கு வங்க மாநிலக் கட்சியான திரிணாமூல் காங்கிரஸ் கூட்டணியிலிருந்து வெளியேறிவிட்ட நிலையில் நாடாளுமன்றத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தொல் திருமாவளனையும் சேர்த்து 17 உறுப்பினர்களைக் கொண்ட தி.மு.கவின் ஆதரவு ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு அவசியம் என்ற நிலையிலேயே கலைஞர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தி.மு.கவால் உருவாக்கப்பட்ட தமிழீழ ஆதவாளர் அமைப்பு (டெசோ) அண்மையில் ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டினை சென்னையில் நடத்தியிருந்தது.

அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஐ.நா மன்றத்திடமும் மனித உரிமை ஆணையத்திடமும் கையளித்துவிட்டு சென்னை திரும்பியிருக்கும் தி.மு.க பொருளாளர் மு.க. ஸ்ராலின், திமு.க பாராளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர். பாலு ஆகியோருக்கு டெசோ அமைப்பின் சார்பில் பாராட்டு கூட்டம் நேற்று முன்தினம் தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிப் பேசிய கருணாநிதி, வாக்கெடுப்பு நடத்தி இலங்கை தமிழர்களை சுதந்திரமாக சுயமரியாதையோடு வாழ வைக்க முடியும் என்றும் அந்த வழியை பெறுவதற்கு எடுக்கின்ற முடிபுகளை நிறைவேற்ற எவ்வளவு அழுத்தம் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு அழுத்தம் கொடுக்க தி.மு.கவும் டெசோ இயக்க தலைவர்களும் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

மேலும் பொது வாக்கெடுப்பின் வழியே மிகச் சிறிய நாடுகள் கூட விடுதலை பெற்றிருக்கும் நிலையில் ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஐ.நா மன்றத்தை தயார்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அத்தகைய அழுத்தத்தினை மத்திய அரசே தரவேண்டும். அவ்வாறு ஈழத்தமிழர்களுக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருந்தால்தான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிற்கு திராவிட முன்னேற்றக் கழகம் துணை நிற்க முடி யும் என்று கருணா நிதி தெரிவித்துள்ளார்.

(மேலும்ஒருசெய்தி உள்ளே) (ந-11)

## காணி விற்பனைக்கு

கைதடி மானிப்பாய் வீதியில் பெண்கள் பாடசாலைக்கு அருகாமையில் றோட்டுக் கரையோரம் உள்ள 11 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு
021 321 2674
077 659 2246
(948)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## நடுக்கட்டல் உத்தியோகத்தருக்கான விண்ணப்பம் கோரல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் ஆதன வரி வசூலிப்பதற்காக நடுக்கட்டல் உத்தியோகத்தர்கள் தேவைப் படுகின்றனர். விரும்புபவர்கள் தமது விண்ணப்பத்தை தலைமை அலுவலகத்தில் நேரடியாக சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி நா. ஐங்கரன்
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.
(C-1505)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை இணைந்து நடாத்தும்

## உலக நீரிழிவு நோய் தினம் – 2012

உலக நீரிழிவு நோய் தினம் 2012 இனை முன்னிட்டு இரட்ணம் அறக்கட்டளை நிறுவனத்தின் ஆதரவுடனான மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம் மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையமும் இணைந்து நடாத்தும் உலக நீரிழிவு நோய் தினத்தினை 15.11.2012 வியாழக்கிழமை அன்று கொண்டாடத் தீர்மானித்துள்ளோம்.

இத் தினத்தில் சகல நோயாளர்களிற்குமான இலவச சலரோக இரத்த பரிசோதனைகள் நடைபெறும். அத்துடன் நீரிழிவு நோயினைக் கட்டுப்படுத்துவதற்கான அறிவுரைகள் பல்வேறு துறைசார் நிபுணர்களினால் வழங்கப்படும். இதில் இரத்தப் பரிசோதனைகள் காலை 7.00 மணி தொடக்கமும் மருத்துவ பரிசோதனைகள் மற்றும் அறிவுரைகள் காலை 11.00 மணியளவில் இருந்தும் நடைபெறும்.

*சகலரையும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

(C- 1506)
கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்.

## அக்கராயன் பல நோ. கூ. சங்கம் (வ-து)

### கிளைப் பொதுச்சபை கூட்டங்களுக்கான அறிவித்தல்

கிளைக்குழுக்களை தெரிவுசெய்தல் (25.11.2012) ஞாயிற்றுக்கிழமை

மேற்படி சங்கத்தின் துணை விதி 27/28 இன் படி இந்தச் சங்கத்தின் கீழ்வரும் கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்காக பின்வரும் கிளைகளில் பொதுச்சபைக் கூட்டங்களை கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அமைய வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கு கூட்ட அறிவித்தல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்காக கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு சமுகமளித்து குழுவை தெரிவு செய்ய உதவவும். தனிப்பட்ட அறிவித்தல் கிடைக்கப்பெறாவிட்டாலும் இந்த அறிவித்தலை கருத்தில் கொண்டு கூட்டத்துக்கு சமுகமளிக்க முடியும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் திகதி : 25.11.2012
ஞாயிற்றுக்கிழமை நேரம் : முற்பகல் 10 மணி

| தொடர் இல | கிளை இல | கிளையின் பெயர் | கிளை பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 01 | ஸ்கந்தபுரம் கிளை | ஸ்கந்தபுரம் இல. I அ. த. க. பாடசாலை |
| 02 | 02 | கோணாவில் கிளை | கோணாவில் அ. த. க. பாடசாலை |
| 03 | 03 | யூனியன் குளம் கிளை | யூனியன் குளம் அ. த. க. பாடசாலை |
| 04 | 04 | அக்கராயன் கிளை | அக்கராயன் ம. வி |
| 05 | 05 | வ்ன்னேரிகுளம் கிளை | வன்னேரி ஐயனார்புரம் அ. த. க. பாடசாலை |
| 06 | 06 | ஆனைவிழுந்தான் கிளை | ஆனைவிழுந்தான் அ. த. க. பாடசாலை |
| 07 | 07 | ஊற்றுப்புலம் கிளை | ஊற்றுப்புலம் அ. த. க. பாடசாலை |
| 08 | 08 | கண்ணகைபுரம் கிளை | கண்ணகைபுரம் அ. த. க. பாடசாலை |
| 09 | 09 | ஸ்கந்தபுரம் மேற்கு கிளை | ஸ்கந்தபுரம் இல. II அ. த. க. பாடசாலை |

செயலாளர்
அக்கராயன் பல நோ.கூ. சங்கம். (954)
தொலைபேசி : 077 799 1521

union assurance
Trust in your tomorrow, today.
என்றென்றும் எமது நிகழ்கால எதிர்கால வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

## யூனியன் அஷ்யூரன்ஸின்

இனிய தீபத் திருநாள் நல் வாழ்த்துக்களுடன்...
2013 புத்தாண்டை முன்னிட்டு புதுமையும் ஒளி நய்மும் வாழ்வில் மலர்ந்திட

யூனியன் அஷ்யூரன்ஸின் ஆயுள் காப்புறுதி திட்டங்களூடாக அனேக நன்மைகள்

வாழ்க்கையை அனுபவிக்க - ஓர் ஆயுள் காப்புறுதி




union assurance
Trust in your tomorrow, today.
130, Stanley Road,
Jaffna. 021 222 3753

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இருமல்

இருமல் என்று சொல்கிறதில் (Cough) இரண்டு வகை உண்டு. சிலரது இருமல் இரசிக்கிற மாதிரி இருக்கும். அது சங்கீத இருமல் என்று சொல்வார்கள். சிலரது இருமல் அவஸ்தையாக இருக்கும்– அது சங்கடமான இருமல்– மருத்துவ ரீதியாக இருமலை இரு வகையாகப் பிரித்திருக்கிறார்கள்.

அதாவது... சில வகை இருமலுக்கு நாம் வைத்தியரை நாட வேண்டியது அவசியமாகும்.

சரி! இருமல் வருவதற்கு என்ன காரணம்? வைத்தியர்கள் அதற்கு அதிகப்பட்ட காரணங்களைக் கூறுகிறார்கள்.

அதாவது சுவாசப் பாதையிலே ஏற்படும் உறுத்தல், தூசு அதிகமாக உள்ள சூழல், கடுமையாக உணர்ச்சி வசப்படுவது, சிறுநீரகம் செயல் இழந்து இருப்பது, மார்பு எலும்புகளிலே ஏற்படும் காயங்கள், உணவுப் பொருள் தவறிப்போய் மூச்சுப் பாதையிலே நுழைந்து அதை வெளியே தள்ளத் தும்மல் வரும்.

சில வகையான நோய்களுக்கு இருமல் ஒரு முதல் எச்சரிக்கையாகும்.

நிமோனியா, ஆஸ்துமா, காச நோய், நுரையீரல் புற்று நோய் இவையெல்லாம் அதற்கு உதாரணங்களாகும்.

இனி நாம் எது மாதிரியான இருமலுக்கு வைத்தியரை நாட வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

இருமலுடன் சேர்ந்து காய்ச்சல் இருந்தால்; அதுவும் குழந்தைகளுக்கு இப்படி இருக்குமாகில், வைத்தியரைச் சந்திப்பது நல்லது. இருமும்போது இரத்தம் வந்தால் அது கவனிக்க வேண்டிய விடயமாகும். புகை பிடிப்பவர்களுக்கு இப்படி இருந்தால் அது Bronchitis இற்கு அடையாளமாகும்.

நெஞ்சினிலே வலி... உணவு விழுங்கும் போது கஷ்டம், மூச்சு விட சிரமம், இப்படியெல்லாம் இருந்தால் வைத்தியரை நாடுவது அவசியமாகும்.

இது மாதிரி எதுவுமில்லாமல் வெறும் இருமல் நான்கு நாட்களுக்கு மேல் நீடித்தால் வைத்தியரை அணுக வேண்டும். குழந்தைகளுக்கு இப்படியாக ஏற்பட்டால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உடனே கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிலக்கடலை, சட்டைப் பொத்தான், பென்சிலின் முனை இப்படி எதையாவது குழந்தை விழுங்கியிருக்குமானால் அது மூச்சுப் பாதையிலே இருந்து கொண்டு தும்மலை ஏற்படுத்தும். குழந்தைகளுக்கு இதைச் சொல்லத் தெரியாது. நாங்கள் தான் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். இருமலுடன் தடிமல் வருமாகில் வைத்தியரை நாட வேண்டும்.

ஒரு கேத்தலில் தண்ணீரை கொதிக்க வைத்து அந்த ஆவியை மூச்சு வழியாக உள்ளே இழுக்கலாம். நான்கு நிமிடங்கள் இப்படி செய்தால் போதுமானது.

குழந்தைகளுக்கு இப்படியான வைத்தியம் செய்யும் போது அவதானமாக இருக்க வேண்டும். அவர்கள் சூடான திரவங்களைச் சாப்பிடலாம்.

ஒரு கரண்டி தேன் சாப்பிடலாம்... தொண்டைக்கு இதமாகும். சிலர் இருமல், தும்மல் இருக்கும்போது மார்பிலேயும் கழுத்திலேயும் மருந்து தடவுவார்கள். அப்படியான வைத்தியம் பிரயோசனமற்றது.

சிலபேருக்கு இந்த மருந்தே அலர்ஜியாக மாறிவிடும்.

சாதாரண மனிதன் இருமல், தும்மல் வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

நமது உடம்பிலே உள்ள எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதற்கு சத்தான ஆகாரம், உடற் பயிற்சி, புகைப்பிடித்தலை நிறுத்துதல், வேகமான நடை பயிற்சி போன்றவை சுவாச அமைப்பை வலுப்படுத்தும்.

துஷ்டரைக் கண்டால் தூர விலக வேண்டும் என்று சொல்வது போல– தும்மலைக் கண்டாலும் தூர விலகுவது நல்லது.

ஒரு தும்மலிலே கோடிக் கணக்கான வைரஸ் கிருமிகள் வெளியே வருகின்றன. அடுத்தவர்களில் இந்தக் கிருமிகள் சுலபமாக பற்றிக் கொள்ளும்.

தடிமல், தும்மல் உள்ளவர்கள் பயன்படுத்தும் சோப், துவாய் என்பவற்றை அடுத்தவர்கள் பயன்படுத்தாது இருப்பது மிகவும் நல்லது.

இவையெல்லாம் நாம் நோய்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் வழிமுறைகளாகும்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பொலிசாரின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் அதிருப்தி

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் தொடரும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் திருநெல்வேலியில் கலாசாலை வீதியிலுள்ள வீடொன்றின் மீது மதுபோதையில் வந்த குழுவொன்று தாக்குதல் மேற்கொண்டதோடு வீட்டின் உரிமையாளரையும் தாக்கிவிட்டு தப்பித்து சென்றது.

ஆனால், தாக்குதல் மேற்கொண்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொலிஸார், அதனைச் செய்யத் தவறியதோடு தாக்குதல் நடத்தியவர்களை இனம் காட்டுவதற்காக பொலிஸாருடன் சென்ற இருவரை எந்தவித பாதுகாப்பும் அற்ற நிலையில் இடை நடுவில் விட்டுவிட்டு சென்று விட்டனர்.

இவ்வாறு தாக்குதல்காரர்களை இனம் காட்டச் சென்றவர்களை இடை நடுவில் அந்தரிக்க விட்டுவிட்டு பொலிஸார் சென்றதோடு அவர்களையும் தாக்குதலுக்கு உள்ளாகும் வகையில் பொலிஸார் செயற்பட்டனர். இதனால் அப்பகுதி மக்கள் பொலிஸார் மீது அதிருப்தியடைந்துள்ளனர்.

மதுபோதையில் அட்டகாசம் புரிந்த குழுவினை கைது செய்து சட்ட நடவடிக்கைஎடுக்கத்தவறியபொலிஸார் மீது உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப. வசந்தகுமார் நடு வீதியில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் தாக்குதலுக்கு உள்ளானது தொடர்பிலும் இதுவரை பொலிஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அத்தோடு திருநெல்வேலிப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பாக இடம்பெற்ற தொடர் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ–6)

# பாடநெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் வலுவூட்டல் திணைக்களத்தினால் நடத்தப்படும் மேலதிக கற்கைநெறி (ALIC) சிங்களப் பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மேலதிக மொழி விருத்திக் கற்கைநெறி நிலைய இணைப் பாளர் ஏ.அரியரத்னம் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறி வார இறுதி நாட்களிலும் பாடசாலை விடுமுறைத் தினங்களிலும் மொடியூல்களின் ஊடாகவும் நேர்முக அமர்வுகளினூடாகவும் நடத்தப்படும்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் அமைந்துள்ள மேற்படி பயிற்சி நிலையங்களில் இணைந்து கற்க விரும்புவோர் நிலைய இணைப்பாளர்களிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ–9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 210 | 150 | 170 |
| உருளைக்கிழங்கு | 80-90 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 100-160 | 120 |
| தக்காளி | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 25-30 | 40 | 40 |
| கோவா | 80-90 | 90 | 120 |
| கரட் | 80-90 | 180-200 | 200 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 50-60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 50-110 | 120-150 | 80 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 75 |
| பாகற்காய் | 200 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 90-100 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 70 | 80 | 80 |
| பயற்றங்காய் | 220 | 160 | 170 |
| லீக்ஸ் | 100 | 120 | 110 |
| பீற்றூட் | 45-50 | 80 | 120 |
| கறிமிளகாய் | 150 | 200 | 180 |
| முருங்கைக்காய் | 100 | 160 | 80 |
| போஞ்சி | 120 | 240 | 240 |
| கத்தரிதம்புள்ள | 150-170 | 200 | 140 |
| கீரை - 1 பிடி | 15-20 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 30 | 30-35 |

# இராசி பலன்

13.11.2012
(ஐப்பசி 28, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
சதுர்த்தசி காலை 6.55 மணிவரை
சுவாதி பிற்பகல் 3.40 மணிவரை
இராகுகாலம் 3.07-4.37 மணிவரை
சுபநேரம் 10.37-12.07 மணிவரை
கேதாரகௌரி விரதம்,
தீபாவளிப் பண்டிகை,
அமாவாசை விரதம்.

**மேடம்** உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உடல் நலம் சீராகும்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளிலிருந்த குழப்பங்கள் அகலும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உதிரி வருமானங்கள் அதிகரிக்கும்.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசும் சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், சொத்துக்களால் நன்மையுண்டு, வழிபாடுகளில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கடகம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சிங்கம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள்.

**கன்னி** சுய முயற்சிகளின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** உறவினர் தொடர்பான சில காரியங்களுக்காக அலைய நேரிடலாம், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், சுப செலவுகள் கூடும்.

**விருச்சிகம்** பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள், சுப செய்திகள் வந்துசேரலாம்.

**தனுசு** புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பணவரவு திருப்திகரமாக அமையும், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மகரம்** விரதம், வழிபாடுகளில் அதிக நம்பிக்கை காட்டுவீர்கள், எதிர்பாராத விதத்தில் சிலர் உதவி செய்ய முன்வருவர், தொழிலில் சில திருப்பங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக்குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், திடீர்ச் செலவுகளால் சேமிப்பில் சிறிது கரையலாம், வேலைச்சுமை கூடும், பிறரிடம் குறைகேட்கும் வாய்ப்புண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் கல் குவிப்பு; பயணிப்போர் சிரமம்

(யாழ்ப்பாணம்)

வீதித் திருத்தப் பணிகளுக்காக போடப்பட்டுள்ள கற்களினால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்.குடாநாடு உட்பட வடபகுதியில் தற்போது வீதித் திருத்தப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

வீதிகள் அகலிப்பு செய்யப்படுவதோடு காப்பெற் இடப்பட்டும் வருகிறது.

வீதித் திருத்தப் பணிகளுக்காக வீதிகளில் போடப்பட்டுள்ள சிறிய கருங்கற்களினால் வாகனங்கள் சேதமாக்கப்படுவதோடு வீதி விபத்துக்களும் அதிகளவில் இடம்பெற்று வருகிறன.

சில பிரதான வீதிகளில் போக்குவரத்தினை முற்றாக தடைசெய்யும் வகையில் கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

எந்தவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் வீதிகளில் குவிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, ஏ-9 பிரதான வீதி என்பன புனரமைப்பு செய்யப்பட்டும் காப்பெற்றிடப்பட்டும் வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)



நன்றி: மிரர்

## வீதி விளக்குகள் இன்றி பயணிகள் பெரும் சிரமம்

### நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரிவில் அல்வாய் திக்கம் வீதி இரவு நேரங்களில் வீதி விளக்குகள் இன்றி இருளில் மூழ்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியானது திக்கம் மாணாண்டி, சமரபாகு ஆகிய இடங்களுக்கு செல்லும் ஒரு பிரதான வீதியாக காணப்படுகிறது.

இவ்வீதி ஊடாக தினமும் பலர் இரவு நேரங்களிலும் தமது அன்றாட தேவைகளை கவனிக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

இரவில் மின் விளக்குகள் இல்லாததினால் இவ்வீதியூடாகச் செல்லும் பலர் விபத்தில் சிக்கிக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இப்பயணிகளின் விபத்தை தவிர்க்கும் வகையிலும் மக்களின் போக்குவரத்திற்கு வசதியை ஏற்படுத்தும் வகையிலும் விரைவாக தெரு விளக்குகளை ஒளிரச் செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-10)




## ஜம்இய்யத்துல் உலமாவின் விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பிரசாரக்குழு நாடளாவிய ரீதியில் கதீப் மார்கள், குர்ஆன் மத்ரஸா உஸ்தாதுமார்கள் பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் பொது மக்களுக்கான கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

இதன் தொடரில் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண முஹியத்தீன் ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட ஜம்இய்யா கிளையின் புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கு தொடர்பான மேலதிக விபரங்களை 0715410198 அல்லது 0777 571876 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, யாழ்.மாவட்ட அனைத்து உலமாக்களையும் பொதுமக்களையும் இக் கருத்தரங்கில் தவறாது சமுகமளித்து பயன் பெறுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுள்ளது. (அ)

## ஸ்ரீ அம்மா பகவானுக்கு நன்றி நவிலல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவானின் நன்றிகள் நவிலல் நாளை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் அம்மா பகவான் ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வருடமும் ஸ்ரீ அம்மா பகவானின் அருட்கடாட்சத்தினால் அற்புதங்களைப் பெற்றுக் கொண்ட பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு தாம் பெற்றுக் கொண்ட அற்புதங்களை தெரிவித்து நன்றிகளை தெரிவிக்குமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுள்ளனர். அத்துடன் எதிர்வரும் 17 ஆம் திகதி தனலக்சுமி பூஜையும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (அ-9)

## சகலகலாவல்லி மாலை மனனப்போட்டி முடிவுகள்

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தாரால் நவராத்திரி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர் மட்டத்தில் நடத்தப்பெற்ற சகலகலாவல்லிமாலை மனனப்போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு,


**கீழ்ப்பிரிவு**

முதலாம் பரிசு–அ. மிருனாளினி(யா/கோப்பாய் மகா வித்தியாலயம்), இரண்டாம் பரிசு–ஈ.நிசானா (யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), மூன்றாம் பரிசு–ஜெ.கார்த்திகா (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

முதலாம் பரிசு– ப.சிந்துஜா (யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) இரண்டாம் பரிசு–சு.வைஷ்ணவி(யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), மூன்றாம் பரிசு– வெ. ஷம்சிகா(யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) (அ)

## புதுப்பொலிவுடன் காந்தி சிலை திறப்பு



(யாழ்ப்பாணம்)

அரியாலையில் உடைக்கப்பட்ட மகாத்மா காந்தியின் உருவச்சிலை புதுப்பொலிவுடன் நிறுவப்பட்டு நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டது. அரியாலை மேற்கு ஆசீர்வாதப்பர் வீதியிலுள்ள காந்தி சனசமூக நிலையத்தின் பொன்விழா மண்டபத்திற்கு முன்பாக நிறுவப்பட்டிருந்த மகாத்மா காந்தியின் சிலை கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை இரவு இனம் தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டிருந்தது.

காந்தியின் சிலை உடைக்கப்பட்டது தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டுமெனவும் உடைக்கப்பட்ட உருவச் சிலையை மீளவும் புனரமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருந்தார். இது தவிர, யாழ்.இந்தியத் துணைத்தூதுவர், காந்தி சனசமூக நிலையத்தினரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது மதுபோதையில் சிலை உடைக்கப்பட்டது தெரியவந்தது. வீதியின் ஓரத்தில் பாதுகாப்பற்ற முறையில் சிலை நிறுவப்பட்டதனால் தான் இவ்வாறு உடைக்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டு தற்போது மிகவும் பாதுகாப்பான முறையில் யாராலும் சேதமாக்கப்படாத வகையில் காந்தி சிலை நிறுவப்பட்டுள்ளது. (அ-6)

## வடமராட்சியில் பலருக்கு காய்ச்சல்

வடமராட்சியில் பலர் காய்ச்சலுக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் கிசிச்சை பெற்று வருகின்றனர். கடந்த வாரங்களில் பெய்த கனமழையை அடுத்து பலர் காய்ச் சலுக்கு இலக்காகி சிகிக்கை பெற்று வருகின்றனர்.

சில குடும்பங்களில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இந்நோய்க்கு இலக்காகியுள்ளனர். வைத்தியசாலைகளில் வெளிநோயாளர்கள் பிரிவுகளிலும் வைத்தியசாலை விடுதிகளிலும் பலர் இந்நோய்க்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3-10)

## மகிந்தவுக்கு ஆசி வேண்டி பூசை

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மா கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் விசேட பூசைகள் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக பதவியேற்று மூன்று வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன் தலைமையில் இவ் விசேட பூசைகள் இடம்பெறும் என்று இந்து சமய கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி இம்மாதம் 12ஆம் திகதியிலிருந்து 19-ம் திகதி வரை யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் விசேட பூஜைகள் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-11)

## தீபாவளி கொண்டாட்டம்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தீபாவளிப் பண்டிகை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பெண்கள் இல்ல ஆராதனை மண்டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்க தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் அவர்களும், அவரது பாரியார் ஸ்ரீமதி நித்யா மகாலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி வி.பி.சிவநாதனும் கலந்துகொள்ளவுள்ளார். (ந-11)

## பரிசில் தினம்

யாழ். புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய பரிசில் தினம் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை யோன் பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

பாடசாலையின் அதிபர் மா.ஞானப் பிரகாசம் தலைமையில் பழைய மாணவன் அருட்திரு வி.பி.தனேந்திரா அடிகளார் நிகழ்வினை தொகுத்து நடத்துகிறார்.

பிரதம விருந்தினராக பேராசிரியர் அருட்தந்தை ஞானமுத்து பிலேந்திரன் அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார். (ந-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- ரோகினி 2
உயரம்:- 5'4"
கி.பா:-43.5, 2 இல் செவ்.
தகைமை:-Bsc Eng. Pradaniya msc Eng. UK PR. B/349

பிறப்பு:- 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- கேட்டை 4
உயரம்:-5'7"
கி.பா:-38.25, 12 இல் செவ்.
தொழில்:- AAT இடைநிலை நிர்வாக உத்தியோகத்தர் B/350

பிறப்பு:- 1984 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரம் 4
உயரம்:-5'6"
கி.பா:-57.25, 1இல் செவ்.
தகைமை:- கணனி ஒப்பரேற்றர் (தனியார்) B/356

பிறப்பு:- 1982 இந்து
நட்சத்திரம்:-உத்தரட்டாதி 4
உயரம்:-5'11"
கி.பா:-30.5, 12 இல் செவ்.
தகைமை:- Bsc Eng (Civil) மொறட்டுவ Engineer B/357

பிறப்பு:- 1988 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- ரோகினி 4
உயரம்:- 5'3"
கி.பா.-11
தகைமை:-A/L G/413

பிறப்பு:-1978 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- புனர்பூசம் 4
உயரம்:- 5'4"
கி.பா.-57, 12 இல் செவ்.
தகைமை:-Bsc Dipin Education (ஆசிரியை) G/415

பிறப்பு:- 1980 இந்து
நட்சத்திரம்: மகம் 1
உயரம்: 5'3"
கி.பா: 10.75, 4 இல் செவ்.
தகைமை:-வெளிவாரிப் பட்டதாரி G/417

பிறப்பு:- 1971 இந்து
நட்சத்திரம்:-பரணி 3
உயரம்:-5'4"
கி.பா: 24.75,12 இல் செவ்.
தகைமை:-O/L
எ.பா.:- (விவகாரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்) G/428

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி


# கோல்டன் கீ வழக்கிலிருந்து பிரதம நீதியரசர் விலகல்

செலிங்கோ நிறுவனம் தொடர்பான வழக்குகளை தான் விசாரணை செய்யப் போவதில்லை என்று பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்.

செலிங்கோ நிறுவனத்துடன் தொடர்புடைய கோல்டன்கீ நிறுவன மோசடி மற்றும் சிறிராம் நிறுவனம் தொடர்பான அனைத்து வழக்கு விசாரணைகளில் இருந்தும் தான் விலகிக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

அக்கட்சிக்காரர்களின் வேண்டுகோளுக்கிணையவே விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் இனி அவ்வழக்குகளை தான் விசாரிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)


**YARL Taxi**

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com


# உறுப்பினரை நியமித்தது மக்கள் விடுதலை முன்னணி

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கான உறுப்பினரின் பெயரை மக்கள் விடுதலை முன்னணி கடந்த வியாழக்கிழமை அறிவித்துள்ளது

ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தையே மக்கள் விடுதலை முன்னணி நியமித்துள்ளது இக்குழுவிற்கான உறுப்பினர்களின் பெயர்களை ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் பெயர்களை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ -2)

# மன்னார் நகர சபைக்கு உட்பட்ட மின்விளக்குகள் ஒளிரவில்லை

## பயணிப்பதில் மக்கள் சிரமம்

மன்னார் மாவட்டத்திலுள்ள பல தெரு மின்விளக்குகள் தொடர்ந்து ஒளிராதுள்ளதாகவும் இதனால் இரவு வேளைகளில் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் நகரப் பகுதியில் சுமார் 200 இற்கும் மேற்பட்ட தெரு மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றில் பல தெரு மின்விளக்குகள் ஒளிராதுள்ளன.

மன்னாரின் பல இடங்களிலும் தெரு மின் விளக்குகள் உள்ளபோதும் பல கிராம வீதிகளிலுள்ள தெரு மின் விளக்குகள் ஒளிராதுள்ளன. மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளிலும் ஒளிராத நிலையிலுள்ள தெரு மின் விளக்குகளை திருத்தி புதிய மின் குமிழ்களை பொருத்தும் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் பல மின் விளக்குகள் ஒளிராதுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் மின்சார சபையிடம் முறையிட்ட போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையென இம்மக்கள் கவலை கொள்கின்றனர்.

மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பல தெரு மின் விளக்குள் பழுதடைந்த நிலையில் அவற்றை மாற்றி மீண்டும் ஒளிர வைக்கும் நோக்கில் மன்னார் நகர சபை முதற் கட்டமாக 5 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் 200 தெரு மின்விளக்குகளையும் அதற்கான உபகரணங்களையும் கொள்வனவு செய்து மன்னார் மின்சார சபையின் உதவியுடன் பொருந்தினார். (அ-2)

# நிவாரணம் கிடைக்காதது தமிழ் மக்களுக்கு ஏக்கமே

(கொழும்பு)

தமிழ் மக்களின் மனதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எந்தவிதமான நிவாரணங்களும் கிடைக்காது என்ற சந்தேகம் தமிழ் மக்களின் மனங்களில் உருவாகியுள்ளது. மாகாண சபை முறைமை இல்லாதொழிக்கப்படும் என ஆளும் கட்சி அமைச்சர்களே குறிப்பிடுகின்றனர்.

மாகாண சபைகளின் அதிகாரங்களை குறைப்பது பொருத்தமானதல்ல. மாகாண சபை அதிகாரங்களை வலுப்படுத்த வேண்டியது அவசியமானது.

சிறுபான்மை மக்கள் அவர்களது பிரதேசங்களில் பிரச்சினைகளுக்கு சுயமாக தீர்வு காணக் கூடிய வகையில் மாற்றம் ஏற் படுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# போர் முடிவுற்ற பின்னரும் பாதுகாப்புக்கு பாரிய நிதி?

## அரியநேத்திரன் எம்.பி.கண்டனம்

போர் இடம்பெறாத காலத்திலும் பாதுகாப்பிற்காக பாரியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் இடைத்தங்கள் முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

முகாம் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு உதவிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு மக்களுக்காக வரவு செலவுத் திட்டத்தில் எந்தவிதமான யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வெலிக்கடைச் சிறைச்சாலைச் சம்பவத்தைத் தொடர்ந்து கைதிகள் பீதியடைந்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கைத்தொலைபேசி பாவிக்கத்தடை

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளின் போது கையடக்கத் தொலைபேசிகளை எடுத்து வர வேண்டாம் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட விவாதம் ஆரம்பிப்பதற்கு முன்னர் நாடாளுமன்ற உறுப் பினர்கள் அனைவருக்கும் இந்த அறிவிப்பை சபாநாயகர் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-9)


**தொடர்ந்தும் உங்கள் சேவையில்**

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த தீபத்திருநாள் நல் வாழ்த்துக்கள்

- உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும்
- உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும்
- Dialog தொலைபேசி அட்டைகள்

WESTERN UNION MONEY TRANSFER

T.P.No:- 0212225592
E.mail:- srimurugan09@gmail.com

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(த-1488)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு தேவைகளுடன் இயங்கி வரும் உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்

உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம் பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் இயங்கி வருவதனால் அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பல சிரமத்தின் மத்தியிலேயே கல்வியை தொடர வேண்டிய அவல நிலை உள்ளது.

கடந்த 1992 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப்பாடசாலையானது யுத்தம் காரணமாக மீள்குடியேற்றத்தின் பின் கடந்த 2010 ஆண்டு மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 303 மாணவர்கள் கல்விகற்று வரும் இப்பாடசாலையில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு சமயம், உடற்கல்வி, புவியியல், தகவல் தொழில்நுட்பம், 2 ஆம் மொழி ஆகிய பாடங்களுக்கு நிரந்தர ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இப்பாடசாலையில் 5 வகுப்பறைகளே காணப்படுகின்றனது. இன்னும் 6 வகுப்பறைகள் தேவையாகவுள்ளது. வகுப்பறை வசதியின்மையால் மாணவர்கள் மரநிழலிலேயே கல்விகற்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

இப்பாடசாலையில் காணப்படுகின்ற மாணவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப தளபாடங்கள் இல்லாது அவதியுறுகின்றனர். அத்துடன் பாடசாலைக்குரிய கற்றல் உபகரணங்கள் பாதுகாத்து வைப்பதற்கு ஏற்ற தளபாட வசதியும் காணப்படாமையால் பெரும் சிரமநிலையுள்ளது.

நடனம், சங்கீதம், சித்திரம் ஆகிய பாடங்களுக்குரிய செயற்பாட்டறை இல்லை. இப்பாடசாலையில் ஒரு நிரந்தர கட்டடமே காணப்படுகின்றது. விளையாட்டு உபகரணங்கள் மாணவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப இல்லை. அத்துடன் விளையாட்டு மைதானம் இன்மையால் விளையாட்டு செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

விஞ்ஞான ஆய்வு கூடவசதி ,நூலக வசதி என்பன இப்பாடசாலையில் இல்லை. மேலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு நூல்கள் இல்லை. கணனி அறை இல்லை. தகவல் தொழில்நுட்ப பாடத்திற்கு பயிற்றப்பட்ட ஆசிரியரும் இல்லை. இப்பாடசாலைக்கு 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தூண்டாய், அளம்பில் கிராமத்தில் இருந்து மாணவர்கள் நடந்தே வருகின்றனர். துவிச்சக்கர வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படல் வேண்டும்.

இப்பாடசாலைக்கு அரச, தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படாமையால் மாணவர்கள் நேரம் தாமதித்தே பாடசாலைக்கு வருகின்றனர். இப்பாடசாலைக்கு வாகன தரிப்பிடம் இன்மையால் வாகனங்கள் வெயிலில் காணப்படுகின்றது.

வெளிமாவட்டத்தில் இருந்து 7 ஆசிரியர்கள் இப்பாடசாலைக்கு கற்பிப்பதற்கு வருகை தருகின்றனர். இவர்களுக்கான தங்குமிட வசதி இல்லை. உணவு களஞ்சியம், பிரார்த்தனை மண்டபம் என்பன இப்பாடசாலைக்கு இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இப்பாடசாலைக்கு 3 மொழிகளிலும் பெயர்ப்பலகை அமைக்கப்படவில்லை. சிறுவர் பூங்கா வசதி, ஆண்களுக்கான மலசல கூடவசதி என்பன இல்லை.

இப்பாடசாலைக்கு சுற்றுமதில் சீரின்மையால் கால்நடைகள் இப்பாடசாலைக்குள் சென்று வகுப்பறைகள் மற்றும் ஏனைய இடங்களை அசுத்தம் செய்கின்றன.

எனவே இத்தனை குறைபாடுகளுடன் இயங்கும் இப்பாடசாலையை உரிய தரப்பினர் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து மாணவர்களது கல்விச் செயற்பாட்டுக்கு உதவுமாறு மாணவர்களது பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

## அமைச்சர் விமலின் வழக்கு ஒத்திவைப்பு

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு கோரி தேசிய சுதந்திர முன்னணி உயர் நீதிமன்றித்தில் தாக்கல் செய்யவிருந்த வழக்கை ஒத்திவைத்துள்ளது.

அந்த கட்சியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரரண விசாரணை செய்யும் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதால் சட்டத்தரணிகள் ஆலோசனையின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவது பிற்போடப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. (அ-2)

## கூ.சங்கங்களுக்கு பரிசளிப்பு விழா

மாவட்டத்திலும் மாகாணமட்டத்திலும் கடந்த ஆண்டு சிறப்பாக இயங்கி வந்த கூட்டுறவு சங்கங்களுக்கான பரிசளிப்பு விழா பிற்பகல் 3 மணிக்கு சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன் பாகவுள்ள யாழ். மாநகரசபை மைதானத் தில் இடம்பெற வுள்ளது.

இதில் மாவட்ட மட்டத்தில் சிறப்பாக செயற்பட்டு வந்த சங்கங்களுக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமையும் மாகாண மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சங்கங்களுக்கு மறுநாள் வெள்ளிக்கிழமையும் வழங்கப்படவுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசு அறிவித்துள்ளார். (அ)

# பெற்றோலுக்கு தட்டுப்பாடில்லை; கையிருப்பு உண்டு-அமைச்சர் சுசில்

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு தேவையான பெற்றோல் கையிருப்பிலுள்ளதாக பெற்றோலிய கைத்தொழில் அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு தேவையான மசகு எண்ணெய் சவுதி அரேபியா, வியட்நாம், மற்றும் ஓமான் ஆகிய நாடுகளிடமிருந்து தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளும் வகை யில் அந்நாடுகளுடன் வெகுவிரைவில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து நாடுகளினதும் மசகு எண்ணெய் வகைகள் இலங்கையில் பாவனைக்கு பொருந்தாது என்பதால் நம் நாட்டுக்கு பொருத்தமானவற்றை மாத்திரம் பெற்றுக் கொள்வதிலேயே அமைச்சு கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் செலவீனங்களைக் குறைத்துக் கொள்ளும் வகையில் எதிர்காலத்தில் சிங்கப்பூரிலுள்ள மசகு எண்ணெய் சந்தையிலிருந்து நேரடியாக அவற்றைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

டுபாய் நாட்டிலிருந்து ஏற்கனவே இரண்டு கப்பல்களில் இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட மசகு எண்ணெய் சுத்திகரிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த வாரமளவில் சவுதி அரேபியாலிருந்து மேலுமொரு கப்பல் இலங்கைக்கு வரவிருப்பதாகவும் அவர் கூறினார்.

இவற்றிக்கு மேலதிகமாக டிசம்பர் மாதமளவில் அபுதாபியிலிருந்து மசகு எண்ணெயினை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெற்றோலுக்கு தட்டுப்பாடு ஏற்படாது. இவ்வருட இறுதி நாடாளவிய ரீதியில் சீரான பெற்றோல் விநியோகம் நடைபெறுமெனவும் அவர் உறுதியளித்தார்.

மேலும் அடுத்த வாரம் சவுதி அரே பியாவிலிருந்து ஒரு இலட்சத்து 35 ஆயிரம் மெட்ரிக்தொன் மசகு எண்ணெய் கொண்டுவரப் படவிருப்பதாகவும் அவர் கூறினார். (அ-2)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ்கழக ஆளுநர் லயன் எஸ்.எஸ் தங்கராசாவினால் 15 முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொடிகாமம் லயன்ஸ் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உதவிகளைப் பெற்றுக்கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களுடன் விருந்தினர்கள் இருப்பதைப் படத்தில் காணலாம்.

# மாபெரும் தடகள விளையாட்டுப் போட்டி

தீபாவளித் தினத்தை முன்னிட்டு, கண்ணகை அம்மன் கோவிலடி சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் தடகள விளையாட்டுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் பே. பிரியந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ். உள்ளூராட்சித் திணைக்கள சன சமூக நிலைய தலைமை அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.தவநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி அதிபர் சு. இராஜமகேந் திரன், கோப்பாய் வடக்கு கிராம அலுவலர் செ. வசந்தகுமார், வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களப் பொறியியலாளர் செல்வி. கோபிகா சிவகடாட்சம், மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்தியர் எஸ். நித்தியரூபன் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர். வெற்றிபெற்றவர் களுக்கான பரிசில்களை திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி ரஜனி பிரதீபன் வழங்கி வைப்பார். இதில் காலை 6 மணிக்கு மரதன் ஓட்டம் இடம் பெறும். (அ-2)


மணமகன், மணமகள்

1000 பதிவுகளை நோக்கி



கல்யாணமாலை

KALYANA MALAI

( சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்) எனும் முகவரியில் இயங்குகிறது



சமய. சமூக வேறுபாடின்றி பதிவுகள் நடந்தவண்ணமுள்ளன.

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே...!


செவ்வாய்க்கிழமைகளில் விடுமுறை

குறிப்பு: பதிவை மேற்கொள்ளும் போது சாதகம். போட்டோ என்பன அவசியம்திருமண தரகர்கள் பதிவு செய்ய முடியாது.

தொடர்பு:-021 720 1005

E-mail: kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீபத் திருநாள் சிறப்பு மலர் 2012




Browns Tours ROYAL FERNWOOD EXIDE TAFE






## மனதில் மறைந்துள்ள அசுரர்கள் அழியட்டும்

கோபம், பொறாமை, அழுக்கு, ஆபாசப்பேச்சு, பாலியல் வக்கிரங்கள், வக்கிர புத்திகள், ஏமாற்றுதல், புறம்கூறுதல், சுயநலம், புகைத்தல், மது அருந்துதல் என எமது மனதில் மறைந்துள்ள அசுரர்கள் எல்லாம் இறையருளால் இவ் இனியநாளில் அழிந்து போகட்டும். சொந்த இடங்களில் வாழ முயற்சிக்கும் மக்களுக்கு ஒளி கிடைக்கட்டும். வேலைவாய்ப்பின்றி இருக்கும். இளையவர்களின் வாழ்விற்கு ஒளி கிடைக்கட்டும். அடிப்படை வாழ்வாதாரமின்றி குடியமர்ந்த மக்கள் வாழ்விற்கு ஒளி கிடைக்கட்டும். மத மாற்றங்கள், ஆலயத் திருட்டுகள், நில அபகரிப்புக்களில் ஈடுபடும் அசுரர்கள் அழிந்து போகட்டும் என இறைவனை வேண்டி இவ் இனிய நன்நாளில் அனைவருக்கும் மகிழ்ச்சி பொங்க தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ. சபா வாசுதேவக்குருக்கள்**
**தலைவர், இந்துமத குருமார் ஒன்றியம்.**

## புதுயுகமொன்று மலரட்டும்

தீபங்கள் வீடுதோறும் ஒளிரட்டும்
தீப ஒளி உலகெங்கும் பரவட்டும்
எங்கும் சமதர்மம் ஓங்கட்டும்
இதயங்களில் இங்கிதம் நிறையட்டும்
பட்டினிச்சாவு மறையட்டும்
பசுமைப் புரட்சியொன்று பாரினில் உருவாகட்டும்
ஆனந்தம் அகமெங்கும் பொங்கட்டும்

அன்பு கொண்ட நெஞ்சங்கள் மகிழட்டும்
உரிமைகள் பெற்றுப் பெண்மை உய்யட்டும்
உழைப்பவர் வாழ்வு சிறக்கட்டும்
ஒற்றுமையால் தமிழினம் தழைக்கட்டும்
உன்னத ஆட்சி மண்ணில் மலரட்டும்
புதிய தீபாவளியின் வருகையோடு
புதுயுகம் புவியதனில் புலரட்டும்

**குறிஞ்சிக்கவி செ.ரவிசாந் வீரமனை, குப்பிளான்.**




பெண்ணுக்கு பொன்னழகா?
பொன்னுக்கு பெண்ணழகா?

ஸ்ரீதேவி கருமாரி நகை மாடம்
83/01, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு,
யாழ்ப்பாணம். தொ.பே:-0215672567




சகல பாமசி & குறோசறீஸ் பொருட்களையும்
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள

ரூபா பன் முக வர்த்தகம்

இல:104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2479






அனைவருக்கும்
தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

யோகாஸ் நகைமாடம்
205/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 9269



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீபத் திருநாள் சிறப்பு மலர் 2012



## தீயவை நீக்கி நல்லவை உருவாக்குவோம்

உலகில் எத்தனையோ ஜீவன்கள் உள்ளன. அவற்றில் மனிதப் பிறவியை மிகவும் பாக்கியமாகக் கருதுகிறோம். காரணம், மனிதப்பிறவியில் மட்டும்தான் தானும் சந்தோசமாக வாழ்ந்து அடுத்தவர்களையும் சந்தோசமாக வாழவைக்கமுடியும். அப்படியான முழுமையான, நிறைவான வாழ்க்கையை நாம் அமைத்துக்கொள்ள வேண்டுமென்றால் நம்மிலுள்ள தீமைகளை நீக்கி நல்லவைகளை உருவாக்கிக்கொள்ளவேண்டும். அப்படித்தீயவைகளை விடுத்து நம்முள் நல்லவைகளை உருவாக்கிக்கொள்ளவே இந்து தர்மத்தில் நிறைய பண்டிகைகளையும் விழாக்களையும் கொண்டாடுகின்றோம்.

நம் தர்மத்திலுள்ள அனைத்துப் பண்டிகைகளும் வெறும் சரீர சந்தோசத்திற்கு மட்டுமல்லால் உயர்ந்த ஞானத்தையும் ஆனந்தத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவ்வகையில் தீபாவளித் திருநாள் ஒளியின் விழாவாகக் கொண்டாடுகின்றோம். நரகாசூரன் என்னும் தீயசக்தியின் அழிவை விழாவாகக் கொண்டாடுகின்றோம். நல்ல குணங்களை உருவாக்கிக்கொள்வது எவ்வளவு முக்கியமோ அந்தளவிற்கு தீயகுணங்களை விடுவதும் நம்மைவிட்டு நீக்குவதும் மிகமிக முக்கியமானதாகும்.

நம்முள் மறைந்து நமக்குள் துன்பத்தையும் கவலைகளையும் தருகின்ற பேராசை, கோபம், குரோதம் போன்ற இருள்மயமான நரகாசூரன்களை அழித்து பக்தியின் மூலமாக தெய்வ அருளைப்பெற்று அமைதி, அன்பு, ஆனந்தம், தர்மசிந்தனை போன்ற நல்ல குணங்களை உருவாக்கிக் கொள்வதே தீபாவளிப் பண்டிகையின் விசேட நோக்கமாகும்.

எனவே தீபாவளி நன்னாளில் தீயவைகளை நீக்கி நல்ல குணங்களை உருவாக்கிக் கொண்டு எல்லா வளங்களுடன், நலமுடன் வாழ ஆசிகள் கூறி வாழ்த்துகிறோம்.

பிரதிஷ்டா சிரோ்மணி, சிவஸ்ரீ
சோ.தண்டபாணிகதேசிகர் J.P,
பிரதமகுரு, வல்வை ஸ்ரீ
முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம்.



## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி

இன்று தீபாவளித் திருநாள். தமிழ்மக்களுடைய பெருநாளாகிய இந்தப் புனித நன்னாளில் இலங்கை வாழ் அனைத்து மக்களும் ஆகுலம் நீங்கி அன்பின் ஊற்றில் மூழ்கித் திளைத்துச் சந்தோஷ, சமாதான வாழ்க்கையில் நிம்மதிபெற வேண்டுமென்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**யாதும் ஊரே யாவரும் கேளீர்** என்ற முதுமொழிக்கிணங்க சகல மக்களும் சமாதானமாகி ஒன்றுபட்டு, உழைப்பால் உயர்ந்து மகிழ்வுற எமது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கி எங்கும் மங்களம் பொங்கி தீபாவளி நன்னாளில் திருமகள் அருள்பெற்று நல்வாழ்வ; சிறக்க எல்லாம்வல்ல நல்லைக்கந்தனின் திருவடி பணிந்து நல்லைக் குருமணியின் பத்ம மலர்ப்பாதம் போற்றித் துதித்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி உளம் மகிழ்ந்து வாழ்த்துகிள்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள், நல்லை ஆதீன முதல்வர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீபத் திருநாள் சிறப்பு மலர் 2012





அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்




## கிருஷ்ணா நகை மாளிகை

இல- 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5046

கிளை : கிருஷ்ணா அடகுக்கடை
இல- 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

நல்லூர்
## சரவணா ரெக்ஸ்

இல. 770, 772,
தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

இல. 526,529,
பருத்தித்துறை வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 1723

இல. 171,பிரதான வீதி
சம்பத்வங்கிக்கு அருகாமை,
நெல்லியடி.
தொ.பே:- 021 226 2992

219 பிரதான வீதி,
சங்கானை.
(HNB வங்கிக்கு முன்பாக)
021 225 0909

பிறக்கும் தீபத் திருநாளில் அனைத்து மாணவர்களுக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



## IISEES Nallur Campus

762, Point Pedro Road, Nallur.
021 222 4728, 0774446626, 0777444225
E-mail: info@iiseees.lk



*அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்*

மணப்பெண் அலங்காரம் மணப்பெண்களுக்கான முக ஒப்பனைகள், அனைத்துவகையான முக ஒப்பனைகள் சிறுவர், மகளிருக்கான ஹெயர் கட்ஸ் & ஒயில் மசாஜ் மெனிகியூர், பெடிகியூர் & நக அலங்காரம் *(Nail Arts)* பேர்மிங் *(Perming)*, ஸ்ரெயிற்னிங் *(Straightening)* ரீ-பொண்டிங் *(Re-Bonding)* & கலரிங் *(Colouring)*

**Special Bridal Packages & Wedding packages are Available**

## தட்ஷா
அழகுக் கலையகமும்
பயிற்சி நிலையமும்



இல.84, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9713, 0773383643
E-mail: thadsha83@yahoo.com



*அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்*

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு?
நீங்கள் துல்லியமான பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா?
முன்னரைவிட உறுதியான, அழகான வெண் சங்குப் பற்களைக் கட்டிட-இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

## எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

இல 564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2486

**கிளைகள்:**
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
இல 91 கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி, கொக்குவில்.



கட்டுப் பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பார்வையில் 03

# வரவு செலவுத்திட்டம் 2013

போக்குவரத்து, எரிபொருள், மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றுக்கான செலவீனம் அதிகரித்த போதிலும் பெரும்பாலான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் நிலையாக திடப்படுத்தப்பட்டன. பண வீக்கமானது இவ்வருடம் ஜூலை மாதத்தில் 9.8 சதவீதத்தில் மிக உச்ச நிலையினை அடைந்து பின்னர் ஒக்டோபரில் 8.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. வேலைவாய்ப்பின்மையானது தொடர்ந்தும் வீழ்ச்சிப் போக்கில் சென்று கொண்டிருக்கின்றது. சவால்களை எதிர்கொண்ட போதிலும் இந்த ஆரோக்கியமான விளைவுகளை ஒருங்கிணைப்பதற்கு நாம் முன்மொழிகின்றோம்.

5. 2013-2015 பேரண்ட பொருளாதார நோக்கு

5.1. கௌரவ சபாநாயகர் அவர்களே, இப்பின்னணியில் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டமானது சராசரி பொருளாதார வளர்ச்சி வீதத்தினை 2013 இல் 7.5 சதவீதமாகவும் அதன் பின்னர் 8 சதவீதமாகவும் உறுதிப்படுத்துவதற்கான சட்டகத்தினை அமைத்துள்ளது. நாணய விரிவாக்கத்தினை 14 சதவீதமாக பேணுவதற்கான நாணய கொள்கை உபாயங்கள் மற்றும் சாதகமான உணவு வழங்கல் நிலைமைகள் பணவீக்கத்தினை ஏறக்குறைய 7 சதவீதமாக குறைக்கச் செய்யும். நாணயச் செலாவணி சந்தையில் நெகிழ்ச்சித்தன்மையானது வர்த்தக பற்றாக்குறையினை குறைப்பதற்கு ஏற்றுமதிகளில் மேம்பாட்டினையும் இறக்குமதிகளில் குறைப்பினையும் ஏற்படுத்துவதற்கு முடியுமாக இருக்கின்றது. சர்வதேச ஒதுக்குகளை உறுதிப்படுத்தக்கூடிய கொடுப்பனவு மீதியில் பொதுவான மிகையொன்றினை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. 2013 இற்கான அரசிறை உபாயமானது பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6 சதவீதமாக பேணுவதற்கும் அரசாங்க முதலீட்டினை தற்பொழுதைய மட்டத்தில் பாதுகாப்பதற்கும் அரசாங்கத்தின் அபிவிருத்தி கருத்திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு அதிகரிக்கப்படும் என்பதை நான் இச்சபைக்கு உறுதியாக கூறுகின்றேன். அரசிறை உபாயமானது 2013 இல் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை 5.8 சதவீதமாக பங்களிப்புச் செய்யும் என்பதுடன் 2015 அளவில் 4.5 சதவீதமாக பற்றாக்குறையினை நகர்த்துவதுடன் அரசாங்க படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 75 சதவீதத்திற்கு குறைவாக காணப்படும். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே இந்த சீர்திருத்தங்களானவை எந்தவொரு அரசாங்கமும் அண்மைய வருடங்களில் மேற்கொண்டிராத வகையில் சிறந்த அரசிறை பொறுப்புக்கான இந்த அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்புகளாகும்.

6 தேசிய நல்லிணக்கம்.

6.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, 2011-2015 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைச் சட்டகமானது தேசிய ஒருங்கிணைப்பின் மூலம் மிகவும் கடுமையான உழைப்பினால் பெறப்பட்ட சமாதானத்தினை ஒருங்கிணைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை அடிப்படையாக கொண்ட ஜனாதிபதி விசேட செயலணியினால் இனம்காணப்பட்ட நல்லிணக்க முயற்சிகளின் செயற்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். மும்மொழி இலங்கை, சமூக ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், முன்னைய போராளிகளின் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒருமைப்பாடு, காணி உறுதிகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள், வீடமைப்பு தேவைகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அத்துடன் இப்பிரதேசங்களிலுள்ள அரசாங்க



சேவைகளை உறுதிப்படுத்தல் என்பவற்றை ஊக்குவிப்பதற்கான முன்னெடுப்புகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை முன்னெடுப்பதற்காக உரிய செலவின முகவர்களின் கீழ் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளில் ரூபா 763 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் செயன்முறையினை துரிதப்படுத்துவதற்காக மேலும் ரூபா 500 மில்லியன் குறைநிரப்பல் ஏற்பாடொன்றுக்கு நான் முன்மொழிகின்றேன். ஜனாதிபதி விசேட செயலணியின் பொதுவான மேற்பார்வையின் கீழ் இந்த நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு முழுமையாக பொறுப்புடைய, தொடர்புடைய நிறுவனங்களிலுள்ள சிரேஷ்ட அலுவலர்கள் நியமிக்கப்படுவர்.

7 குடும்பம், சமயம் மற்றும் கலாசாரம்

7.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, குடும்பம், சமயம் மற்றும் கலாசாரம் என்பன இலங்கையின் பெறுமான முறைமையில் மிகவும் தொடர்புபட்டவையாகும். கலாசாரம், சமுதாயம் மற்றும் தனிப்பட்ட குடும்பங்களின் மத்திய நிலையமாக சமயத்தளங்கள் காணப்படுகின்றன. மஹிந்த சிந்தனையானது குடும்ப பெறுமானங்களை ஊக்குவிப்பதற்கு அபாயகரமான போதைப்பொருள் பாவனையினை இல்லாதொழிப்பதற்கு வயது முதிர்ந்த மற்றும் அங்கவீனமுற்றவர்களுக்கான பராமரிப்பு ஏற்பாடுகள், நோய்களை ஆரம்ப கட்டத்திலேயே தடுத்தல், ஆரோக்கியமான வாழ்க்கை முறையினை அறிமுகம் செய்தல் மற்றும் எமது சமுதாயத்தில் சமூக மற்றும் சமய ஒருமைப்பாட்டினை மேம்படுத்தல் என்பவற்றுக்கு சமுதாய பங்களிப்புடன் சமய நிறுவனங்களை மையப்படுத்திய குடும்ப வாழ்க்கையை மற்றும் சமுதாய வலுவூட்டலினை நோக்காக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே உள்ளூர் சமுதாய பங்குபற்றலுடன் அத்தகைய முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு சமய நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

8 வறுமையற்ற இலங்கை

8.1 எமது நாட்டில் வறுமை 8.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் சில குறைவருமானம் பெறும் குடும்பங்களுக்கு மத்தியில் நீர், வீடமைப்பு மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நிலைமைகள் என்பன நியாயமான அளவு மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன. இப்பிரதேசங்களில் வாழ்கின்றவர்கள் சிறுவர் மற்றும் தாய், நலன்புரி தேவைகள் விசேட வசதிகளை வேண்டி நிற்கின்றனர். போக்குவரத்துக்கான அடைவு குறைவாக காணப்படுகின்றமை அவர்களது அடிப்படை வாய்ப்புகளான கௌரவமான வாழ்க்கை மற்றும் சந்தைப் பிரதேசங்களுக்கான இணைப்பு என்பவற்றினை மறுக்கச் செய்துள்ளது.

பெரும்பாலான குறைவருமானம் பெறும் குடும்பங்கள் போதைப்பொருள் பாவனை, சட்டரீதியற்ற மதுபானம், குற்றச்செயல்கள் மற்றும் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

எனவே, மிகவும் இலக்கிடப்பட்ட முன்னெடுப்புக்களின் ஊடாக வறுமையில் எஞ்சியுள்ள பகுதியினையும் இல்லாதாக்குவதற்கு தொடர்புடைய முகவர்களை ஈடுபடுத்துவதற்காக மூன்று வருடங்களின் போது தேசிய வரவு செலவுத்திட்டத்திலிருந்து அதிகமான நிதியினை ஏற்பாடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

8.2 நிரல் முகவர்களின் அனைத்துக் கள மட்ட அலுவலர்களுடனும் இணைந்து ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள 14 ஆயிரம் புதிய பட்டதாரிகளும் ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்கு வறுமைத் தணிப்பு ஊக்குவிப்பாளர்களாக ஈடுபடுத்தப்படுவர். மலசலகூடங்கள் மற்றும் அடிப்படை வீடமைப்பு வசதிகள் இம்மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

கிராமிய பாடசாலைகளை விருத்தி செய்வதற்கும் சிறுவர் நட்பு பாடசாலை சூழலை உருவாக்குவதற்கும் அத்தகைய பாடசாலைகளுக்கு செல்லும் ஒவ்வொரு சிறுவருக்கும் இலசவமாக தானிய உணவு, பால் மற்றும் முட்டைகளை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

மேலும் இப்பாடசாலைகளுக்கு செல்லும் சிறுவர்களுக்கு அரையாண்டிலும் இலவச சீருடை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும் இந்த கஷ்டப்பட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற சிறுவர்களுக்கு இலவசமாக ஒரு சோடி பாதணிகளை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். இந்த நாட்டில் ஆரம்ப பாடசாலை கல்வியினை 100 சதவீதமாக பாதுகாப்பது எமது இலக்காகும்.

8.3 தாய் மற்றும் சேய் மரண வீதத்தினை அபிவிருத்தியடைந்த நாட்டின் அந்தஸ்தினை அடைந்து கொள்வதும் இந்த உபாயத்தின் இலக்கொன்றாகும் . எனவே கிராமிய வைத்தியசாலைகள், மருந்தகங்கள் தாய் மற்றும் சேய் பராமரிப்பு நிலையங்கள் என்பன பொருத்தமான இடங்களில் அமைக்கப்படும். சிறுவர் போசாக்கு தொடர்பான தாய்மார்களே அறிவூட்டுவதற்கு அறிவு பகிர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நாட்டின் போசாக்கின்மையினை இல்லாதொழிப்பதற்காக குறைவருமான குடும்பங்களுக்கு மத்தியில் முனைப்பாக மேற்கொள்ளப்படும்.

இக்குடும்பங்களுக்காக இலக்கிடப்பட்ட திவிநெகும மற்றும் சமுர்த்தி முன்னெடுப்புக்களின் மூலம் கிரமமான உணவு வழங்கல் மற்றும் போசாக்கு தேவைப்பாடுகள் உறுதிப்படுத்தப்படும். போசாக்கின்மைமீதான ஜனாதிபதி விசேட செயலணி கிரமமான மீளா ய்வினை மேற்கொள்வதுடன் இந்த விசேட முன்னெடுப்புக்கள் தொடர்பில் குறிப்பான நடவடிக்கைகளை எடுக்கும்.

8.4 கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது அரசாங்கத்தின் நோக்கம் வறுமையற்ற நடுத்தர வருமான பொருளாதாரமாக இலங்கையினை உருவாக்குவதுடன் 2016 அளவில் மிலேனிய அபிவிருத்தி இலக்குகளை விட மேலே செல்வதாகும்.

எனவே எஞ்சியுள்ள வறுமையினை இலக்காக கொண்ட துரிதப்படுத்தப்பட்ட றுமை தணிப்பு முன்னெடுப்புக்களுக்கு ரூபா 15 ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்த தேசிய முயற்சியில் வளப் பகிர்வாளர்களாக இணைந்து செயற்படுவதற்கான அபிவிருத்தி பங்காளர்களையும் தனியார் துறையினரையும் அரசாங்கம் அழைப்பு விடுக்கின்றது. வியாபார சமூகம், வங்கித் தொழில் மற்றும் நிதி நிறுவனங்கள், சுற்றுலா ஹோட்டல்கள், பெருந் தோட்ட கம்பனிகள் மற்றும் பாரிய கைத் தொழில் நிறுவனங்கள் அவற்றினது நிறுவன சமூகப் பொறுப்புடைமையினை நிறைவேற்றுவதற்கு விசேட வறுமை தணிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் இந்த தேசிய முயற்சியில் பங்கு பற்றுமென நான் எதிர்பார்க்கின்றேன்.

9. பெறுமதி உருவாக்க பொருளாதாரத்தை நோக்கி

9.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது அனைத்து மக்களுக்கும் வாழ்வாதார சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கான எமது பொருளாதாரத்தினை கட்டியெழுப்ப செய்யும் மிக முக்கிய தூணாக தேசிய நல்லிணக்கம் மற்றும் வறுமையற்ற இலங்கையொன்றினை காணுதல் என்பவற்றுக்கான எமது அபாயம் காணப்படுகின்றது. இது குடும்ப பொருளாதார செயற்பாடுகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அத்துடன் தனியார் துறை, அவற்றினது முதலீடு மற்றும் உற்பத்தியினை விரிவாக்குவதற்கு நிறுவன மற்றும் ஊக்குவிப்பு கட்டமைப்பினை ஈடுபடுத்துவதற்கு இது தேவைப்படுகின்றது. திவிநெகும நிகழ்ச்சித்திட்டமானது உணவு உற்பத்தி, கால்நடை மற்றும் குடிசைக்கைத்தொழில்களில் ஈடுபடுகின்ற 2.5 மில்லியனை விட அதிகமான குடும்பங்களை சென்றடைந்துள்ளதுடன் உணவு, பாதுகாப்பு மற்றும் துணை வருமானத்தினையும் வழங்குகின்றது. வரவு செலவுத்திட்டத்தில் பல்வேறுபட்ட நிரல் அமைச்சுக்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள பாரியளவிலான வாழ்வாதார ஊக்குவிப்பு நடவடிக்கைகளை 2016 ஆம் ஆண்டளவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை உயர் வருமானம் பெறும் குடும்பங்களாக உயாத்துவதற்கு மேலும் துரித நடவடிக்கை எடுக்கப்படும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

100

# ஒல்லாந்தர் காலம்

**விமலதர்மசூரியனின் பின்னர்...**

1707 ஆம் ஆண்டு இரண்டாம் விமலதர்மசூரியன் மரணமான பின்னர், அவனுடைய மகன் வீரபராக்கிரம நரேந்திரன் அரசகட்டில்



விமலதர்மசூரியன்

ஏறினான். இவன் திறமையான ஆட்சியாளன் அல்லன். இவனுடைய ஆட்சிக்காலத்தில் பிரதானிகளின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. மன்னனின் மனைவி நாயக்க குலத்தவள் ஆகையால் நாயக்க உறவினரின் செல்வாக்கும் அரச சபையில் அதிகரித்திருந்தது. வீரபராக்கிரம நரேந்திரன் காலத்தில் வெளிநாட்டு வர்த்தகம் செய்யும் பொருட்டு கல்பிட்டி, புத்தளம் போன்ற துறைமுகங்களைத் திறந்துவிடுமாறு கண்டிப் பிரதானிகள் ஒல்லாந்தரிடம் கேட்டனர். ஒல்லாந்தர் இணங்காது இருந்தனர். அதனால் யானைத் தந்த வர்த்தகத்தைக் கொண்டனர். அத்துடன் மலையகத்தில் விளைவித்த கறுவா, பாக்கு, மிளகு போன்ற பொருட்களைத் தன்னையறியாமல் ஒல்லாந்தருக்கு விற்கக் கூடாதென வீரபராக்கிரம நரேந்திரன் கட்டளையிட்டான்.


வீரபராக்கிரம நரேந்திரன் காலமாகியதும் ஸ்ரீவிஜயராஜசிங்கன் அரசனானான். இவன் மன்னனின் மனைவியின் சகோதரனாவான். அரசனுக்குப் பிள்ளைகள் இல்லையாயின் மனைவியின் சகோதரனை அரசனாக்குவது நாயக்க பரம்பரை வழக்கமாகும். ஸ்ரீவிஜயசிங்கனுடன் கண்டி இராச்சியத்தில் நாயக்கர் ஆட்சிக்காலம் தொடங்கியது. வேறு இன ஆட்சியினர் ஆட்சியில் அமர்ந்ததால் கண்டி ஆட்சியில் சிங்களப் பிரதானிகளினதும் நாயக்கப் பிரதானிகளினதும் செல்வாக்கு அதிகரித்திருந்தது. அவர்களுக்கிடையில் பிரச்சினைகளும் ஏற்பட்டன.

1638 ஆம் ஆண்டு முதல் கண்டி அரசர்களுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பபட்டுள்ளன. ஆனால் ஓரளவு சமாதானம் நிலவியது. 1734 இல் இருந்து அவர்களிடையே நிலவிய நல்லுறவு பாதிக்கப்படலாயிற்று. அதற்கு ஸ்ரீ விஜயராஜசிங்கனின் கடும் போக்கே காரணமாயிற்று. இம்மன்னனின் காலத்தில் வெல்விற்ற சரணங்கரா என்ற பிக்கு ஒருவர் விமலதர்மசூரியன் காலத்தில் இருந்தே மிக முக்கியமானவராக இருந்தார். கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் இத்தேரரிடம் சிறுவயதில் பௌத்த கல்வி கற்ற மாணவனாவான். அவர் உபசம்பத நெறிகளை ஒழுங்கு படுத்துவதற்காக சீயத்திலிருந்து பிக்குகளை இங்கு வரவழைக்க வேண்டுமென மன்னனிடம் கோரினார். சீயத்துக்கு ஒரு தூது கோஷ்டி ஒல்லாந்தக் கப்பலில் புறப்பட்டுச் சென்றது. 1753 இல் உபாலி தேரரோடும் இருபது பிக்குகளோடும் திரும்பிவந்தது. திரும்பி வந்த வேளை கீர்த்தி ஸ்ரீ இராஜ சிங்கன் அரியணையில் இருந்தான். சங்கராஜாவாக சரணங்கரா நியமிக்கப்பட்டான். சரணங்கரா பல் சமய நூல்களையும் இலக்கணம், மருத்துவம் ஆகிய துறைசார் நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

1747 இல் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் அரியணை ஏறினான். நாயக்க அரசர்களுள் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்குத் தனியிடம் உள்ளது. அவன் 1760 இல் படையெடுத்து ஒல்லாந்தருக்குச் சொந்தமான கட்டுவன கோட்டை, ஹக்மன்த, தங்காலை முதலான தாழ்நிலப் பிரதேசங்கள் சிலவற்றை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டான். இப்படையெடுப்புக்கு தாழ்நிலத்தைச் சேர்ந்த மக்களும் உதவியாகவிருந்தனர். ஆனால், 1762 இல் ஒல்லாந்தர் மீண்டும் மலைநாட்டைத் தாக்கி தாம் இழந்த பிரதேசங்களை மீட்டுக் கொண்டனர். ஒரு பௌத்த தேசத்தில் நாயக்கர் அரியணையில் வீற்றிருப்பதும், ஆட்சியில் இந்துக்கள் முக்கியம் வகிப்பதும் சிங்களப் பிரதானிகளுக்கும் மதத் தலைவர்களுக்கும் விருப்பான செயலாகப் படவில்லை. அதனால் அவர்கள் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனை அரியணையிலிருந்து நீக்கிவிட்டு, சீயத்திலிருந்து பிக்குவாக இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட இளவரசன் ஒருவனை அரசனாக்க முயன்றான். இன்னொருசாரார் மொலாந்தே என்பவன் தலைமையில் கோபாலமுதலியார் என்பவரை அரியணையேற்ற விரும்பினர். சதி முறியடிக்கப்பட்டது. புரட்சியாளர்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர். மொலாந்தேயின் காணிகள் கோபாலாமுதலியாருக்கு அரசனால் கையளிக்கப்பட்டன. கண்டியில் ஏராளமான இந்துக் கோயில்கள் இருப்பதும் சிங்கள பிக்குகளுக்கு வெறுப்பைத் தந்தன. சைவ விக்கிரகங்கள் ஊர்வலமாக எடுத்து வருவதும் பிடித்தமாகவில்லை. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனிடம் முறையிட்டபோது பெரஹரா என்ற ஊர்வலத்தைத் தலதா மாளிகையிலிருந்து ஆரம்பித்து வைத்தான்.



இலங்கையில் ஒல்லாந்தர் காலத்து அரசமாளிகை



ஒல்லாந்தர் காலத்து மரத்தூண்

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்தில் இலக்கிய நூல்கள் எழுதித் தொகுக்கப்பட்டன. சீயம் பிக்குகள் தாம் வரும்போது மஹாவம்சத்தின்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

ஒரு பிரதியை எடுத்து வந்திருந்தனர். விஜயன் காலத்திலிருந்து மகாசேனன் வரையிலான 36 அத்தியாயங்கள் அதில் மகாநாமதேரரால் எழுதப்பட்டிருந்தன. மஹாவம்சச் சீயப்பிரதி இலங்கைப் பிரதியுடன் ஒத்துப் பார்க்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அமைந்த சூளவம்சத்தின் முதல் 37 ஆம் அத்தியாயத்திலிருந்து 42 ஆம் அத்தியாயம் வரை, ஸ்ரீமேக வண்ணனிலிருந்து பராக்கிரமபாகு வரை பர்மாவிலிருந்து வந்திருந்த தர்மகீர்த்தி என்ற தேரரால் எழுதப்பட் டன. விஜயபாகு தொட்டு 5 ஆம் பராக்கிரமபாகுவரை சூளவம்சத்தின் இரண்டாம் பாகம் பெயர் தெரியாத பிக்குவால் எழுதப்பட்டது. அதன்பின்னர் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்வரை எழுதிச் சேர்க்கப்பட்டது. இந்நூல்களில் சொன்ன வரலாற்றிலும் சொல்லாது விட்டவை, சிங்கள வரலாற்றில் பிரச்சினைக்குரியவையாகும் என ஹெய்கர் தன்மொழி பெயர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

(தொடரும்)




போர்த்துக்கேய நாணயம்




ஒல்லாந்த நாணயம்

ஒல்லாந்தர் -போர்த்துக்கேயர் காலத்து நாணயக்குற்றிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

279

## அதிர்ஷ்டம் போயிற்று



ஆபிரிக்காவின் ஒரு நாட்டில் ஒரு செம்படவன் இருந்தான். அவன் ஒரு குளத்திற்கு வழக்கமாக மீன்பிடிக்கச் செல்வான். பல இடங்களில் வலைகட்டி வைத்துப் பின்னர் அவற்றை இழுத்து அவற்றில் கிடைக்கும் மீன்களை விற்று வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் அவனது வலையில் எதோ ஒரு கனமான பொருள் சிக்கவே அவன் மிகப்பெரிய மீன் சிக்கியதாக எண்ணிக்கொண்டு அதனை இழுத்தான். ஆனால் அவ்வலையில் சிக்கியது மீனல்ல ஒரு கிழவி. அது

### அம்புலிமாமா கதைகள்

கண்டு செம்படவன் ஆத்திரம் கொண்டு அவளைத் தூக்கிக் குளத்தில் எறியப் போனான்.

அப்போது அந்தக்கிழவி செம்படவனிடம் அப்பனே என்னைக் குளத்தில் போட்டு விடாதே. உன்னோடு என்னை வீட்டிற்கு அழைத்துப்போ என்றாள். செம்படவனோ நான் ஜீவிப்பதே கஷ்டமாக இருக்கிறது. உன்னையும் வேறு வீட்டில் வைத்துக் கொள்ளவேண்டுமா? என்றான்.

ஆனால் அக்கிழவி அவனைக்கெஞ்சி காலில் விழுந்து எப்படியோ தன் காரியத்தை சாதித்துக் கொண்டாள். தன்னை அவனது வீட்டில் வைத்துக் கொண்டால் அவனுக்கு ஏராளமான பொன்னும் பொருளும் கிடைக்கும் என்றும் கூறினாள். அச்செம்படவனோ அதை எல்லாம் நம்பவில்லை. வேண்டா வெறுப்பாக அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று உண்ண உணவு கொடுத்தான்.

சாப்பாடு ஆன பின்பு அக்கிழவி உனக்கு ஒரு ஜோசியம் சொல்கிறேன். நாளை நீ பல ஆடு மாடுகளுக்குச் சொந்தக்காரனாகி விடுவாய். எனவே இப்போதே ஒரு பெரிய தொழுவம் கட்டித் தயராக வைத்துக்கொள் என்றாள்.

மறுநாள் காலையில் அவன் தன் வீட்டின் பின்புறமாக ஒரு பெரிய தொழுவத்தைக் கட்டி முடித்தான். அதனை மரக்குச்சிகள், கிளைகள், கம்புகள் ஆகியவற்றைக்கொண்டு கட்டி முடிப்பதற்கும், மாலைப் பொழுது ஆவதற்கும் சரியாக இருந்தது.

அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. தொலைவில் ஏதோ



சத்தம் கேட்க குடிசையில் இருந்து வெளியே வந்த செம்படவன், தான் தினமும் மீன்பிடிக்கும் குளத்தில் இருந்து சாரி சாரியான மாடுகள் வெளியே வருவதைக் கண்டான். அதைவிட அதிசயம் என்னவென்றால் அவையாவும் செம்படவன் வீட்டை நோக்கி வந்தன. அதுவுமின்றி அவன் அப்போதுதான் கட்டி முடித்த தொழுவத்திற்குள் புகுந்தன. அடேயப்பா! நமக்கு இத்தனை பசுமாடுகளா என்று செம்படவன் மிகவும் மகிழ்ந்தான். அதன்பின் அனைத்துப் பசுமாடுகளும் மிகவும் பழக்கப்பட்டவை போல் அந்த பசுமாடுகள் யாவும் அங்கேயே படுத்தும்விட்டன.


அன்றிலிருந்து செம்படவனுக்கும் யோகம் பிறந்தது. ஏனெனில் தினமும் மாடுகள் வரலாயின. பால் கறக்கலாயின. அந்தப் பாலை அவன் விற்கலானான். கையில் நிறையப் பணம் சேர்ந்தது. அவனை விடப்பெரிய பணக்காரன் அந்தச்சுற்று வட்டாரத்திலேயே இல்லாது போனான்.

அவனைக் காண யாராவது சென்றால்கூட இப்போது நேரம் இல்லை. நாளை வா பார்க்கலாம் என்று கூறி அனுப்பி விடுவான். இப்படியாக அவன் தனது முந்தைய நிலையை முற்றிலும் மறந்தே போனான்.

ஆறு மாதங்கள் கழிந்தன. ஒருநாள் அயலூரில் நடந்த விருந்திற்குச் செம்படவன் போய் நன்றாகச் சாப்பிட்டுட்டு குடித்தும் விட்டான்.

நேரமும் அதிகமாகி விட்டதால் சட்டெனப் புறப்பட்டு மெதுவாகத் தள்ளாடிக் கொண்டே தன் வீட்டை அடைந்தான்.

அங்கு எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தனர். அவன் கதவைத் திறக்கும்படி கூவியும் யாரும் கதவைத்திறக்க வில்லை. அவனுக்குக் கோபம் வந்த உடனே எல்லோரும் எங்கே தொலைந்து போனார்கள்? இந்தத் தண்டச்சோறு சாப்பிடும் கிழவி என்ன ஆனாள்? அவளுக்குக்கூட தூக்கம்வேறா? ஏய் கிழமே! எழுந்து வந்து கதவைத் திற



என்று கத்தினான்.

அவனது கூச்சலைக்கேட்டு அக்கிழவி கதவைத் திறந்து கொண்டு நின்றாள். அவனை ஒருமுறை பார்த்து நீ என்னைக் காரணமின்றித் திட்டினாய் செய்த நன்றியை மறந்தவர் வீட்டில் நான் இருக்க மாட்டேன். நான் போகிறேன் எனக்கூறினாள். அவனோ போ, போ ஒழிந்து போ. சனி தொலைந்தது என்று இருக்கிறேன். நீ போனால் எனக்கு என்ன நஷ்டம்? போ, போ என்றான் அவன்.

கிழவியும் விடியும் வரை காத்திருந்துவிட்டு வேலைகளை எல்லாம் செய்துவிட்டு மாட்டுத் தொழுவத்திற்குப் போனாள். பின்பு அங்கிருந்து செம்படவன் முன்பு மீன்பிடித்த குளத்திற்குச் சென்றாள். அவள் பின்னாலேயே எல்லா மாடுகளும் சென்றன.

கிழவி குளத்தில் இறங்க அவையாவும் அந்தக் குளத்தில் இறங்கி மறைந்து போயின. செம்படவனின் நிலை முன்போல் ஆகியது பாவம்! முன்னைப்போல அவன் மீன்களைப் பிடித்து விற்று காலம் கழிக்கலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 கைதிகளின் சடலங்கள் உறவினரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

கொழும்பு, வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் கைதிகளுக்கும் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பலியான 18 கைதிகளின் சடலங்கள் நேற்று முன்தினம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலும் காயமடைந்த 20 கைதிகள், 3 அதிரடிப்படை வீரர்கள் மற்றும் 4 இராணுவ வீரர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய கைதிகள் தொடர்பில் முழுமையான அறிவிப்பு வெளியிடப்படவுள்ளதுடன் அவர்களைக் கைது செய்வதற்கான விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவிக்கையில், கடந்த வெள்ளிக்கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலையில் சோதனையிடச் சென்ற விசேட அதிரடிப்படையினருக்கும் கைதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து 27 கைதிகள் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் 18 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளன.

சில கைதிகள் தப்பியோடியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அவர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சனிக்கிழமை 6 கைதிகள் சரணடைந்துள்ளனர். துப்பாக்கிகள் குறித்து கூடிய அவதானமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

களஞ்சியசாலையிலிருந்து கைதிகளால் எடுக்கப்பட்ட பல துப்பாக்கிகள் மீட்கப்பட்ட போதிலும் அது குறித்து முழுமையான அறிக்கை இன்னமும் கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# இலங்கை மற்றும் ஜப்பான் உறவு 60 ஆண்டுகள் பூர்த்தி

(கொழும்பு)

இலங்கை- ஜப்பான் இராஜதந்திர உறவுகளுக்கிடையே 60 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு விசேட நாணயக்குற்றி ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் மேற்படி விசேட நாணயக் குற்றியொன்று வெளியிடப்படவுள்ளது.

இந்த நாணயக் குற்றியின் பெறுமதி ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இந்த நாணயக் குற்றியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைப்பார்.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் 57 ஆம் நினைவு நாணயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் இராணுவத்தினர் வெளியேறுவர்

## இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை பாதுகாப்பிற்காக நிலை நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் விரைவில் அகற்றிக் கொள்ளப்படுவர் என இராணுவப் பேச்சாளர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

தற்காலிக அடிப்படையில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு வெளியில் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கைதிகள் கலகத்தில் ஈடுபட்டதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

சிறைச்சாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் சிறைச்சாலைக்கு வெளியே நாலாபுறத்திலும் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

விசேட பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 51 ஆவது படைப்பிரிவின் தீபாவளி கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார திருநாளான தீபாவளித் திருநாளை இவ்வருடமும் சிறப்பிப்பதற்கு இலங்கை இராணுவத்தின் யாழ்ப்பாணம் 51 ஆவது படைப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது. தீபத் திருநாளைக் கொண்டாடும் முகமாக இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் நகர மத்தியில், ஆஸ்பத்திரி வீதி மற்றும் பலாலி வீதிகளில் தீப விளக்கேற்றும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் யாழ். நகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த தீபமேற்றும் நிகழ்விற்கு அனைத்து பக்தர்களையும் வருகை தருமாறு பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் அழைப்பு விடுத்துள்ளது. (அ-2)




★ 1002-இங்கிலாந்தில் வசிக்கும் அனைத்து டேன் பழங்குடிகளையும் கொல்லும்படி ஆங்கிலேய மன்னன் எத்தல் ரெட் உத்தரவிட்டான். (இது சென் பிறைஸ் நாள் படுகொலைகள் என அழைக்கப்பட்டது)

★ 1851-வோஷிங்டனின் சியாட்டில் நகரில் முதல் ஐரோப்பியக் குடியேற்றக்காரர்களான ஆர்தர் ஏ.டென்னி என்பவரும் அவரது குழுவினரும் வந்திறங்கினர்.

★ 1887-மத்திய லண்டன் பகுதியில் அயர்லாந்து விடுதலைப் போராட்ட ஆதரவாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் வெடித்தது.

★ 1887-நவம்பர் 11 இல் சிக்காகோவில் தூக்கிலிடப்பட்ட நான்கு தொழிலாளர் தலைவர்களின் இறுதி ஊர்வலத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

★ 1918-ஒட்டோமான் பேரரசின் தலைநகர் கொன்ஸ்டண்டீனப் போல் நகரை கூட்டுப் படைகள் கைப்பற்றின.

★ 1950-வெனிசுவேலாவின் ஜனாதிபதி ஜெனரல் கார்லொஸ் டெல்காடோ சால்போட் படுகொலை செய்யப்பட்டார்.

★ 1957-கோர்டன் கூல்ட் என்பவரால் லேசர் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1965-அமெரிக்காவின் யார்மூத் காசில் என்ற பயணிகள் கப்பல் பகாமசில் மூழ்கியதில் 90 பேர் உயிரிழந்தனர்.

★ 1970-போலா சூறாவளி: கிழக்குப் பாகிஸ்தானில் இடம்பெற்ற மிகப் பெரும் சூறாவளியில் 5 இலட்சம் பேர் வரையில் உயிரிழந்தனர். இது 20 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் இயற்கை அழிவு எனக் கருதப்படுகிறது.

★ 1971-ஐக்கிய அமெரிக்காவின் மரைனர் 9 விண்கப்பல் செவ்வாய்க்கோளை சுற்றி வந்தது. இதுவே பூமியை விட வேறொரு கோளைச் சுற்றி வந்த முதலாவது விண்கப்பலாகும்.

★ 1985-கொலம்பியாவில் நெவாடோ டெல் ரூஸ் என்ற எரிமலை வெடித்ததில் ஏற்பட்ட மண்சரிவினால் ஆர்மேரோ நகரம் அழிந்தது. இதில் சிக்கி 23 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1989-இலங்கையின் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோகண விஜேவீர இராணுவத்தினரால் முதல் நாள் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1990-உலக வலைப்பின்னல் (WWW) ஆரம்பிக்கப்பட்டது.

★ 1993-யாழ்ப்பாணம் புனித ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது இலங்கை விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த 9 பொதுமக்கள் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

★ 1994-ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய சுவிடன் மக்கள் முடிவு செய்தனர்.

★ 1995-சவுதி அரேபியாவில் ரியாத் நகரில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் ஐந்து அமெரிக்கர்களும் இரண்டு இந்தியர்களும் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1934-சுமால் சுமலேஸ்வரன், மேற்கத்தேய இசைக் கலைஞர்

★ 1935-பி.சுசிலா, தென்னிந்திய திரைப்பட பின்னணிப் பாடகி

★ 1969-அயான் கேர்சி அலி, சோமாலியப் பெண்ணியவாதி

★ 1979-ரான் ஆர்டெஸ்ட், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1989-ரோகண விஜேவீர, இலங்கையின் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் (பி.1943)

★ 2002-கணபதி கணேசன், மலேசிய இதழாசிரியர்(பி.1955)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கையை மீறி, இந்தியாவால் எதையும் சாதித்துவிட முடியாது

...நியாயமான அரசியல் தீர்வை ஏற்படுத்தக்கூடிய செயற்திட்டத்துடன் நகர்வதாக இருந்தால் பாராளுமன்ற தேர்வுக் குழுவில் இடம்பெறுவோம். இருதரப்பும் முதலில் தீர்வு திட்டம் குறித்துப்பேசி, உடன்பாடு கண்டு அதனை பாராளுமன்ற தேர்வுக் குழுவிற்கு கொண்டு செல்லலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு அரசுக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதன்படி அரசு நடத்துகொள்ளவில்லை. பாராளுமன்ற தேர்வுக் குழுவில் நடைபெறும் பேச்சு வார்த்தை தோல்வியில் முடியலாம் என்று கருதுகிறோம் என பாராளுமன்ற தேர்வுக்குழுவில் தாங்கள் இடம் பெறாததற்கு காரணம் கூறுகிறார் கூட்டமைப்பின் தலைவர். ஆனால், இலங்கை அரசோ, தமிழத் தேசியக் கூட்டமைப்பை பாராளுமன்ற தேர்வுக்குழுவில் இடம்பெறச் செய்துவிட வேண்டும் என்பதில் மும்முரமாக இருப்பது, அவர் கூறுவதைப்போல ஏமாற்றும் நோக்கம் கொண்டதாகத்தான் கருத வேண்டியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கு சில தினங்களுக்குமுன் ஜனாதிபதியையே சந்தித்துவிட்டுப்போனார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாராளுமன்றத் தேர்வுக் குழுவில் இடம்பெற முயற்சி செய்யவேண்டும் என்று பிரதமரிடம் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். அத்தோடு முன்னதாக சுஷ்மா சுவராஜ் தலைமையில் அரசியல் குழு இலங்கைக்கு சென்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூஃப் ஹக்கீமை பிரத்யோகமாக சந்தித்த சுஷ்மா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாராளுமன்ற தேர்வுக்குழுவில் இடம்பெற நீங்கள்தான் முயற்சிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தார். இவையெல்லாம் இனப்பிரச்சினைக்கு பாராளுமன்ற தேர்வுக் குழு மூலம்தான் தீர்வை எட்ட முடியும் என்ற இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உறுதியாக நம்புவதை வெளிப்படுத்துவதாக உள்ளது. ஆனால், இந்த தேர்வுக் குழுவை தமிழத் தேசியக் கூட்டமைப்பு நம்புவதாக இல்லை.

இந்த தேர்வுக்குழுவின் மூலம் எதிர்பார்த்த அதிகாரப் பகிர்வு கிடைக்காமல் நாங்கள் ஏமாற்றப்படுவோம் என்று கூட்டமைப்பு நம்புவதால் அது பின்வாங்குகிறது. கூட்டமைப்பு இப்படி நம்புவதில் நியாயம் உள்ளது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக அமையும் வகையிலுள்ள 13-வது சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற தயாராக இல்லாத இலங்கை அரசு பாராளுமன்றத் தேர்வுக் குழுவை பிடித்து தொங்கிக் கொண்டிருப்பது தமிழர்களை ஏமாற்றத்தான் என்பதற்கு அவர் சமீபத்தில் கொண்டு வந்திருக்கும் திவிநெகும சட்டம் மற்றும் உள்ளாட்சி தேர்தல் சீர்திருத்தச் சட்டம் சான்றளிப்பதாவே உள்ளது. திவிநெகும சட்டம் மாகாண சபைகளின் கிழ் வரும் நிதி அதிகாரங்களை பறிக்கும் வகையில் உள்ளது. உள்ளாட்சி தேர்தல் திருத்தச் சட்டம்- உள்ளாட்சி மன்றங்களில் விகிதாசார தேர்தல் முறையில் தேர்வு செய்யப்படும் பிரதிநிதிகளை குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி தேர்தல் திருத்தச் சட்டத்தின் மூலம் வடகிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தங்கள் அரசியல் பிரதிநிதிகளை இழக்கும் சூழ்நிலை இதனால் உருவாகும்.

வடகிழக்கில் பல ஆண்டுகளாகவே சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வருகிறது இலங்கை அரசு. இதன் மூலம் தமிழ் மற்றும் முஸ்லிம்கள் அரசியல் அதிகாரம் பெறமுடியாத சூழ்நிலையை அது உருவாக்கப் பார்க்கிறது. ஒருவேளை 13-வது சட்டத் திருத்தங்கள் நிறைவேற்றப் பட்டாலும் வட- கிழக்கில் நிகழும் சிங்கள மக்களின் அதிவேக குடியேற்றங்கள் மூலம் காலப்போக்கில் வடகிழக்கில் அதிகாரங்களும் பெரும்பான்மையினங்களின் கைகளுக்குப் போகும் வகையில் திட்டமிட்டே இலங்கை அரசு செயலாற்றி வருகிறது என்பதை திவிநெகும போன்ற சட்டங்கள் மூலம் அது மறைமுகமாக உணர்த்துகிறது.

2012 ஆம் ஆண்டின் இலங்கை மக்கள் தொகை கணக்கெடுப்பு அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்கள் 22.86 சதவிகிதம் இருப்பதாக அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களில் கிழக்கில் சிங்களக் குடியேற்றம் அதிகரித்திருப்பதற்கு சான்று. தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வேண்டும் என்ற கருத்து வலுவடைந்து வரும் நிலையில் சிங்கள அரசும் அதற்கேற்ற அரசியல் சதித் திட்டங்களை தீட்டத் தொடங்கியுள்ளது. இந்தநிலையில் தான் தமிழர்கள் சுயமரியாதையுடனும், பாதுகாப்புடனும் வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார். தீர்வுத் திட்டத்திற்கு ஏதுவானது என்று பிரதமர் நம்புகிற 13-வது சட்டத் திருத்தத்தை அமுல்படுத்த உரிய அழுத்தம் தராமல் வெறும் வாயால் தமிழர்கள் நலன்பற்றி பிரதமர் பேசுவது கண்துடைப்புதான்.



இந்தியாவின் உறுதிப்பாடு எந்த அளவில் இருக்கும் என்பதை இலங்கை அரசு நன்கு உணர்ந்து இருப்பதால் தான், இந்தியா எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்று இலங்கை ஊடகத்துறை அமைச்சரால் பேச முடிகிறது. இந்திய அரசு விரும்பும் தீர்வுத் திட்டத்தை இலங்கை அரசே ஒப்புக் கொண்டாலும் அதன்படி அது நடந்து கொள்ளுமா என்பது உறுதி செய்ய முடியாதது! அமைதி ஒப்பந்தத்தில் ஒப்புக்கொண்ட ஷரத்துக்களை மீறி சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் போன்ற நாடுகளுடன் இராணுவ ரீதியிலான தொடர்புகளை வைத்திருக்கிறது இலங்கை. இஸ்ரேலுக்கு சில மாதங்களுக்கு முன் தனது நாட்டில் தூதரகத்தையே ஏற்படுத்தக் கொடுத்துள்ளது. மேற்கண்ட நாடுகளின் இராணுவ மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் இலங்கையில் முகாமிட அது அனுமதிக்கிறது. கப்பல் துறைமுகங்கள்கூட சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்திருக்கிறது. ஆக, இனப்பிரச்சினைக்காக இந்திய அரசு விரும்பும் தீர்வுத் திட்டத்தை செயற்படுத்தும் என்று எப்படி நம்ப முடியும்?

அப்படியே ஒப்புக்கொண்டாலும் அதில் இலங்கை தமிழர்களின் நலனைத் தாண்டி இரு நாடுகளின் நலனே மிகைத்திருக்கும்.

இந்தியாவால் இலங்கைமீது அழுத்தம் கொடுத்து எதையும் சாதித்துவிட முடியாது. இந்தியாவின் நிர்ப்பந்தங்கள் ஏற்படுமானால்- சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுடன் நெருக்கம் காட்டி இந்தியாவை பணியச் செய்யும் கலையை கற்று வைத்திருக்கிறது இலங்கை. அதனால்தான் இந்தியாவின் பேச்சை தொடர்ந்து அது அலட்சியப்படுத்தியே வருகிறது. ஆக, இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டங்களில் இலங்கை அரசின் கைதான் ஓங்கியிருக்கிறது. இந்தியாவோ, தமிழர் நலன்... தமிழர் நலன் என்று பேசிக் கொண்டே இருக்கிறது. இப்படி சொல்வதைத் தாண்டி இந்தியாவால் தமிழர்களுக்கு வேறென்ன செய்துவிட முடியும்?

இலங்கையில் யுத்த முடிவுக்குப் பின்னரான அபிவிருத்தி திட்டங்களுக்கு 13-வது சட்டத் திருத்தம் இடையூறாக இருப்பதால் அதனை இல்லாமல் ஆக்க வேண்டும். அல்லது அதில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்கிறார் இலங்கையின் பாதுகாப்புச்செயலாளர் கோத்தபாயராஜபக்ச. அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய கோத்தபாய ராஜபக்ச, மக்கள் நலன் தொடர்பான செயல் திட்டங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்போ, ஆதரவாளர்களோ தலையிடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. 13-வது சட்டத் திருத்தமும் 2002 பெப்ரவரியில் நோர்வே அரசாங்கத்தின் ஏற்பாட்டின்படி கையெழுத்திடப் பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையும் ஒரே மாதிரியானவை. இவை தமிழர்களுக்குத்தான் ஆதரவாளிக்கின்றன. 13-வது சட்டத் திருத்தத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டும் அல்லது அதை அழித்தொழிக்க வேண்டும். இதனை செய்ய அரசாங்கம் தவறினால் தற்போதைய நெருக்கடிகள் தேசிய பாதுகாப்பின்மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளார்.

இலங்கைஃ அரசில் அங்கம் வகிக்கின்ற- பெரும்பான்மைக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் செய்தித் தொடர்பாளர், 13-வது சட்டத் திருத்தம் இலங்கையை பீடித்துள்ள புற்றுநோயாகும். உடனடியாக இதற்கு தீவிர சிகிச்சையளிக்க வேண்டும். இலங்கையின் ஒற்றையாட்சிக்கும், இறையாண்மைக்கும் ஆபத்தான 13-வது சட்ட திருத்தத்தை இந்தியாவின் தேவைக்காக அமுல் படுத்துவதென்பது ஆபத்தையே ஏற்படுத்தும். (முற்றும்)

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் கடல்வளம் தென்பகுதி மீனவர்களால் சுரண்டப்படுகிறது

## வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டு

**வடமாகாண கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களின் பிரச்சினை ஒரு பக்கம் இருக்க இப்போது தென்பகுதியில் இருந்து வடபகுதிக்கு வருகின்ற மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி தொழில் முறையினால் மேலும் பாதிப்பு அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.**

வடமாகாண மீனவர்கள் எதிர்கொண்டுள்ள இந்தப் பிரச்சினைகளுக்கு தென்பகுதி மீனவர்களுடன் நிறுவன ரீதியாக இணைந்து செயற்பட்டு தேசிய மட்டத்தில் தீர்வு காண்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் கூட்டம் நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சொந்தப் பகுதியாக வடமராட்சி கிழக்கு, பகுதியில் மீளக்குடியமர்ந்து வாழ்வாதார முயற்சிகளை மேற்கொண்டுள்ள வேளையில் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியை பெற்றுக் கொண்டு தென்பகுதியில் இருந்து வருகின்றனர்.

இம் மீனவர்கள் அந்தத் தொழிலை செய்வதுடன் சங்கு குளித்தல், சுருக்கு வலை பாவித்தல், டைனமைட் அடித்தல் போன்ற அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டுள்ள முறைகளைப் பயன்படுத்தி தொழில் செய்வதனால் தமது பிரதேசத்தில் ஆயிரத்து 600 மீனவ குடும்பங்களின் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கரையிலிருந்து 28 கடல் மைல் தொலைவில் ஆழ்கடலில் செய்யப்பட வேண்டிய சிலிண்டர் தொழிலை ஆழமற்ற மன்னார் கரையோரக் கடலில் அங்கு வருகின்ற தென் பகுதி மீனவர்கள் மேற்கொள்வதனால் மன்னார் பிரதேச மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுவதாக அப்பகுதி மீனவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிநீண்டகாலமாகத்தொடர்ந்துகொண்டிருக்கின்ற இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை மற்றும் தென்பகுதி மீனவர்களின் சட்டவிரோதத் தொழில் முறைகள் என்பன குறித்து அந்தப் பிரதேசத்து அரசாங்க அதிபர்களிடமும் அத்துடன் அமைச்சர் மட்டத்திலும் பல முறைகள் பேசப்பட்டுள்ளன.

எனினும் இதுவரையில் எந்தவிதமான முடிவுகளும் தங்களுக்கு கிடைக்கவில்லை என்று வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பினர் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில் தென்பகுதி மீனவர் சங்கங்களுடன் இணைந்து தேசிய மட்டத்திற்கு இந்தப் பிரச்சினைகளை கொண்டு சென்று தீர்வு காண்பதே தமது நோக்கம் என மீனவர்களால் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# மீன் பதனிடும் நிலையத்தில் தீ!

(மன்னார்)

மன்னார் பெரியகடை பிரதேசத்தில் இயங்கி வந்த மீன் பதனிடும் நிலையம் ஒன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இத்தீயின் காரணமாக அந் நிலையத்தில் வைக்கப்பட்ட அனைத்தும் அழிவடைந்துள்ளன. மின் ஒழுக்கு காரணமாகவே இந்நிலையத்தில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# சந்தைக்கட்டடம் திறக்கப்பட்ட போதும் வியாபார நடவடிக்கைகள் வீதியில்

## மக்கள் குற்றச்சாட்டு

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்ட மத்திய சந்தைப்பகுதிக்குள் இது வரை எவ்வித செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படவில்லை.


எனினும் இச்சந்தைக்கு முன்னால் உள்ள வீதி ஓரமாக அங்காடி வியாபாரிகள் வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மலிவு நிலையிலே புடைவைகள் வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் தீபாவளியை கொண்டாடும் முகமாக இந்த அங்காடி கடைகளில் பொதுமக்கள் தமது பொருட்களை வாங்குவதை அவதானிக்க முடிகிறது.

இருந்த போதும் வீதியோர கடைகளாக இவை அமைந்திருப்பதால் போக்குவரத்திற்கு நெரிசல்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன.

திறக்கப்பட்ட சந்தையை செயற்பாட்டிற்கு விரைவாக உட்படுத்தப்பட வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

# இன்று சூரியகிரகணம்



தீபாவளி தினமான இன்றையதினம் சூரியகிரகணம் ஏற்படுகிறது. இது இந்த ஆண்டில் ஏற்படும் கடைசி சூரியகிரகணம் என்று குறிப்பிடப்படுகிறது. இச்சூரிய கிரகணம் இன்று நள்ளிரவு 1.08 மணிக்கு ஏற்பட்டு நாளை புதன்கிழமை காலை 6.15 மணி வரையிலும் பார்க்கலாம என கூறப்படுகிறது.

தெற்கு பசுபிக் பெருங்கடல் அந்தாட்டிக்காவின் சில பகுதிகள், தென் அமெரிக்காவின் தெற்கு பகுதி உள்ளிட்ட சில இடங்களில் உள்ள மக்களால் மட்டும் தான் இந்த கிரகணத்தை பார்க்க முடியும். (அ-2)

# வரவு செலவுத்திட்டத்தில் நிவாரணங்கள் இல்லை

## பொருளாதார நிபுணர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட பொதுமக்களுக்கான நிவாரணங்களை நோக்கியதாக இல்லாமல் அரசாங்கத்தின் செலவினங்களை கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என்று பொருளாதார நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

அதிலும் குறிப்பாக குறிப்பிட்ட சில துறைகளை நோக்கி அபிவிருத்தித் திட்டங்களை நகர்த்துவதை இது அடிப்படையாக கொண்டது என்றும் அவர் கூறுகிறார்.

பொதுமக்களுக்கான நிவாரணங்கள் எதுவும் இதில் பெரிதாக கிடையாது என்றும் அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளில் அதிகரிப்பு இருந்தாலும் அது விலைவாசி உயர்வை முகங்கொடுக்க கூடியதாக காணப்படவில்லை என்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

விவசாயத்துறைக்கு குறிப்பாக கிராமிய மட்டத்தில் சில நன்மைகளை இந்த வரவு செலவுத்திட்டம் வழங்கினாலும் அது விவசாயிகளுக்கு நேரடியாக பலன்களை தருமா என்பது சந்தேகமே என்றும் அவர் கூறி னார்.

வழமைபோன்று பாதுகாப்புத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன் மலையக பெருந்தோட்டத்துறைக்கு எந்தவிதமான நேரடியான பலன்கள் அற்றதாக இந்த வரவு செலவுத்திட்டம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நீதிபதி நீதி வழங்கினால் நீதிபதிக்கே ஆப்புதான்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

அரசாங்கத்துக்கெதிராக எந்த ஒரு நீதிபதி தீர்ப்புக்கூறினாலும் அவருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையை கொண்டு வரும் நிலைமை எதிர்காலத்தில் தோன்றும் ஆபத்து உள்ளது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சும ந்திரன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே இன்று அரசாங்கம் பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையை கொண்டு வருகிறது.

இது இலங்கையின் நீதித்துறைக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக இங்கு நீதித்துறையை நிறைவேற்று அதிகாரம் முழுமையாக ஆக்கிரமிக்கும் நிலை ஏற்பட்டுள்ளமையை காணமுடிகிறது என்றும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.


ஏற்கனவே இலங்கையின் நற்பெயருக்கு சர்வதேசத்தில் நல்லபெயர் இல்லை. இந்த நிலையில் பிரதம நீதியரசரின் பிரச்சினை நாட்டுக்கு மேலும் இழுக்கை தேடிக்கொடுக்கும் என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)





யாழ்.மாவட்ட சமுர்த்தி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வர்த்தக கண்காட்சி யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வினை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் இணைந்து நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் விருந்தினர்கள் உட்பட்டோர் கண்காட்சியினை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தீபத் திருநாள் சிறப்பு மலர் 2012




HDFC
GOLD LOAN
பொற் கடன்

உங்களது வீடமைப்பு வங்கியிடமிருந்து
பெறுமதி மிக்க தங்கத்தைக் கொண்டு

- அதி கூடிய பணம் குறைந்த வட்டியுடன்
- அதி உயர் பாதுகாப்பு
- தங்க ஆபரணங்கள் நவீன தொழில்நுட்ப முறையினால் பரிசீலிக்கப்படல்
- உத்தரவாதமளிக்கப்பட்ட நம்பிக்கை
- நம்பகமானதும் நட்புறவுமான வாடிக்கையாளர் சேவை


*நிபந்தனைகளுக்குட்பட்டது

மேலதிக விபரங்களுக்கு
011 5737373
011 2356800
அல்லது அண்மையில் உள்ள HDFC வங்கிக் கிளையை நாடுங்கள்

HDFC BANK

த.பெ.எ. 2085, சேர் சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை, கொழும்பு – 02
உடனடி தொடர்புகளுக்கு– 011-2356800 021-2219283/4 024-2225770 065-2222792
பெக்ஸ்: 011-2423364
www.hdfc.lk Email: hdfc@hdfc.lk
Fitch Rating - BBB+(lka)

Happy Deepavali

## தீராத தீபாவளி

சு.சுதர்ஷன், உள்ளகப் பயிற்சி ஆசிரியர்

ஊரெல்லாம் கொண்டாட்டம்
எங்கும் மலிவு விற்பனை
என்ற பிரகடனம்...
முகங்கள் எங்கும்
ஆயிர சூரிய பிரகாசம்...
சுற்றித்திரிந்த நண்பர்களை
திரும்பிப் பார்த்தேன்...
வெற்றிடமாய்...
அழுகுரல்கள் கேட்ட
காதுகள்... கீறுபட்ட
CD போல் ஒலித்துக்
கொண்டிருக்கின்றன...
வீட்டுத் திட்ட Board ஐ
பார்த்தபடி மக்கள்...
தோப்புக்களை இழந்த
தென்னைகள்...
ஞாபகப்படுத்துகின்றன
கடந்த காலத்தை....
திரும்பிப் பார்க்கிறேன்
என் நண்பன் வாங்கித்தந்த
Shirt அநாதரவாக...






அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

கட்டடப்பொருட்கள், மிற்சுயி நிப்போன் சீமெந்து, Akzonobel பெயின்ற் வகைகள்
(எமர்சன், எனமல், நிக்கோல், டியூகோ), நஷனல் பி.வி.சி (National PVC) குழாய்கள்
Macson வலைகள் மற்றும் எமது நிறுவனத்தால் யாழ்ப்பாணத்தில்
தயாரிக்கப்பட்ட தரமான முட்கம்பிகள்
என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

கஜமுகன் ஹாட்வெயர்
147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:021 222 2833


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீபத் திருநாள் சிறப்பு மலர் 2012

## இந்துமாமன்றத்தின் தீபாவளி வாழ்த்துச்செய்தி

நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திவந்த வண்ணம் இருளை அகற்றி ஒளியேற்றும் திருநாளே தீபாவளி. ஆனால் மகிழ்ச்சியுடன் தீபாவளியைக் கொண்டாடும் நிலை இன்னும் எங்கள் மக்களுக்குக் கிடைக்கவில்லை. தங்களைச் சூழ்ந்திருக்கும் இருள் விரைவில் அகலும் என்ற நம்பிக்கையுடன் தீபாவளி தினத்தில் இன்னும் பிரார்த்தித்துக்கொண்டிருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இழந்தவைகளை மீளப்பெற்று அடிப்படை உரிமைகளுடனும் சம உரிமையுடனும் இந்த நாட்டின் பிரஜைகளாக மீண்டும் தங்கள் இடங்களுக்குத் திரும்பி வாழ்வது இன்னும் ஓர் அபிலாசையாகவே இருக்கிறது. இந்த அபிலாசையை, அவர்கள் திருப்தி கொள்ளும் வகையில் அரசாங்கமும் ஏனையோரும் உதவ ஆவன செய்யவேண்டும். இந்தப் பகிரங்க வேண்டுகோளைத்தான் மீண்டும் இத்தீபாவளி தினத்தையொட்டி விடுவிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் அரசியல்தீர்வு இன்னும் ஒரு கனவாகவே இருக்கின்றது. அந்த திருப்தியையும் அபிலாசையையும் நிறைவேற்ற உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் வெற்றியளிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம். அந்த முயற்சிகள் வெற்றிபெற சகல தலைவர்களும் மக்களின் நலனை மட்டும் கருத்திற்கொண்டு ஒன்றுபட்டு சேவையாற்றவும் இத்தீபாவளி தினத்தில் சங்கற்பம் பூணவேண்டும். எங்கள் மக்களின் எதிர்காலம் சிறப்புற இந்த நாட்டிலும் பாரெல்லாம் பரந்து வாழும் சகல இந்துக்களும் தீபாவளி தினத்தன்று பிரார்த்தனையில் ஈடுபடவேண்டுமென்று பகிரங்கமாக வேண்டுகோள் விடுப்பதுடன் நாங்களும் அதேமாதிரி பிரார்த்தனையில் ஈடுபடுவோம்.

சகலருக்கும் எல்லாம்வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானின் அருளாசி கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

கந்தையா நீலகண்டன்,
பொதுச்செயலாளர்,
அகில இலங்கை இந்து
மாமன்றம்.



## இன்பம் பொங்கும் தீபாவளி

கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் வரும்
இன்பம் பொங்கும் தீபாவளியே
வானத்து நட்சத்திரங்கள் -உன்னை
கண்டு கண் சிமிட்ட
காலைக் கதிரவன் மஞ்சள் பாடை விரித்து
உன் வருகைக்கு மெருகூட்ட
வாசமிக்க புஸ்பங்கள் இதழ்விரித்து
பன்னீர் தெளிக்க
பறவைகளின் குரலோசை- உன்னை
வாழ்த்திப்பாட
அன்னநடை பயின்று வரும் தீபாவளியே
அனல் அனலாய் பறக்குது பட்டாசுகள்
இவையெல்லாம் உன் வரவிற்காக

பாரதிதாசன் சத்யா
அல்வாய் வடக்கு, அல்வாய்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷக்கடி... விரட்டி அடி!


பூரான், குளவி, தேனீ, தேள் போன்றவற்றால் கொட்டுப்படாதவர்கள் அதிகம் இருக்க முடியாது. குறிப்பாக நாட்டு ஓடு வேய்ந்த கூரைகள் உள்ள கிராமத்து வீடுகளில் இந்த ஜந்துக்களின் நடமாட்டம் அதிகமாகவே இருக்கும்.

தேள்களின் குடியிருப்பே ஓடுகளுக்கு இடையில் உள்ள இடைவெளிகள்தான். அதேபோல் ஈரமும் இருட்டும் இருக்கும் குளியல் அறைகள் என்றால் பூரான்களுக்குக் கொண்டாட்டம். குளவியும் தேனீயும் நகர்ப்புறங்களில் கூட நாம் பார்க்கக் கூடியன. எதிர்பாராத இடங்களில் இவை கூடு கட்டுவதும் அவற்றின் கூடுகளைக் கலைக்க நாம் முயல்வதும் அடிக்கடி நடப்பதுதான்.

இவை தீண்டினால் செய்ய வேண்டிய முதல் உதவிகளைப் பற்றியும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றியும் பார்ப்போம்.

### தேள்

பொதுவாகத் தேள் கொட்டுவதால் மிகவும் ஆபத்தான விளைவுகள் இருக்காது என்றாலும் சில சமயங்களில் மிக ஆபத்தாகி



விடுவதும் உண்டு. தேள் கொட்டினால் வலியும் எரிச்சலும் தோன்றும். அந்தப் பகுதி மரத்துப்போவதும் உண்டு. நெறி கட்டுவதும் இருக்கும். சில சமயங்களில் உடல் முழுவதும் உணர்வற்ற நிலை, விழுங்குவதில் சிரமம், நாக்கு தடித்துப் போதல், பார்வை மங்குதல், சுழலுதல், எச்சில் ஒழுகுதல், மூச்சு விடத்திணறுதல் போன்ற பாதிப்புகள் இருக்கும். உச்சக் கட்டமாக மரணம் நேரிடவும் வாய்ப்பு இருக்கிறது.

எனவே, பாதிக்கப்பட்டவரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்வது அவசியம். தேள் கொட்டிய இடத்தில் முள் குத்தியதைப் போன்ற அடையாளம் இருக்கும்.

தேள்களில் சுமார் 2 ஆயிரம் வகைகள் இருந்தாலும் 25 முதல் 40 வகையானவை தான் ஆபத்தானவை. விசத்தன்மையும் தேளுக்கு தேள் மாறுபடும். ஒருவரை தேள் கொட்டி விட்டால் அந்தப் பகுதியை சோப்பு போட்டு நன்றாகக் கழுவ வேண்டும். பின்னர் கொட்டுப்பட்ட இடத்துக்கு அருகில் மோதிரம், மெட்டி, வளையல் போன்ற ஆபரணங்கள் ஏதேனும் அணிந்திருந்தால் அவற்றை அகற்றிவிட வேண்டும். காரணம் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள திசுக்கள் வீங்க முடியாமல் போனால் இரத்த ஓட்டத்தைத் தடை செய்யக்கூடும்.

ஐஸ் கட்டிகளை 10 நிமிடங்கள் வைத்து இலேசாக அழுத்தலாம். பின்னர் ஐஸ் கட்டியை எடுத்துவிட்டு 10 நிமிடங்கள் கழித்து மீண்டும் ஐஸ் ஒத்தடம் தரலாம். வலி நிவாரணிகள் எதையும் பயன்படுத்தக்கூடாது. கொட்டுப்பட்ட இடத்தில் நோய்த்தொற்று ஏற்பட்டிருந்தால் மட்டுமே ஆன்டிபயோடிக் மருந்துகளைக் கொடுக்கலாம். பாதிக்கப்பட்ட இடத்தில் கீறுவதோ வாயை வைத்து உறிஞ்சுவதோ கூடாது.

கொட்டிய தேள் என்ன வகை என்று தெரிந்தால் சிகிச்சைக்கு அது உதவியாக இருக்கும். எனவே, கொட்டிய தேளை ஒரு டப்பாவில் போட்டு மருத்துவரிடம் காட்டலாம். தேள் கொட்டி விட்டால் என்ன செய்வது என்பதைத் தெரிந்து கொள்வது எந்த அளவு முக்கியமோ அதே அளவு தேள் கடியே ஏற்படாமல் பார்த்துக் கொள்வதும் முக்கியம்.

துணிமணிகள், கை உறைகள் மற்றும் கால் உறைகள், சப்பாத்துக்கள் போன்றவற்றை அணிவதற்கு முன் நன்கு உதறி


Health Care மருத்துவ உலகம் உங்கள் நலம் உங்கள் கைகளில்

விட்டுப் பயன்படுத்தினால் தேள் கடி ஏற்படாமல் தப்பலாம். தேள்களுக்கு இரையாகும் சிறு பூச்சிகள், கரப்பான், பல்லி போன்றவை வீட்டுக்குள் இல்லாமல் பார்த்துக் கொண்டால் தேளே வீட்டை நெருங்காது.

நம் உடம்பின் மீது தேள் ஊர்ந்து கொண்டு இருப்பதை உணர்ந்தால் உடனடியாக உதறித் தள்ள வேண்டுமே தவிர உடம்போடு சேர்த்து தேளை அடிக்கக்கூடாது. ஏனெனில், உடம்பில் இருக்கும் தேளை அடித்தால் அது உடனடியாகக் கொட்டி விடும். தோட்டங்களில் கற்களுக்கு அடியில் தேள்கள் இருக்கலாம். எனவே, கற்களைப் புரட்டும்போது கவனம் தேவை. இரவு நேரங்களில் காலணி அணியாமல் வெளியில் நடப்பதைத் தவிர்க்க வேண்டும்.

### பூரான்

பெரிய அளவு பூரான்கள் விஷத்தன்மை



கொண்டவை. இவை கடித்தால் தலைவலி, மயக்கம், குமட்டல், வாந்தி போன்றவை ஏற்படலாம். கடி வாயில் வீக்கமும் இருக்கும். உடனடியாக மருத்துவச் சிகிச்சை அளிக்காவிட்டால் அது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். ஐஸ் கட்டிகளை வைப்பதுதான் உடனடி முதலுதவி.


### குளவி

பொதுவாகக் குளவி கொட்டினால் வலி இருக்குமே தவிர, பெரிய ஆபத்து இல்லை. குளவி விஷம் ஒவ்வாமையை ஏற்படுத்தும். மூச்சுவிடுவதில் சிரமம், வாய் மற்றும் தொண்டைப் பகுதியில் வீக்கம் போன்றவையும் ஏற்பட வாய்ப்புண்டு. ஒன்றுக்கும் மேற்பட்ட குளவிகள் கொட்டிவிட்டால் உடனடியாக மருத்துவரிடம் ஆலோசனையும் சிகிச்சையும் பெற வேண்டும். கண்ணுக்கு அருகில் கொட்டி இருந்தால் கூடுதல் கவனம் தேவை.

கொட்டிய இடத்தில் சீழ் வடிதல், நீர் ஒழுகுதல், கடிவாய் சிவந்து காணப்படுதல், அதிகமான வலி போன்றவை இருந்தாலும் உடனடியாக மருத்துவரிடம் கலந்தாலோசிக்க வேண்டும். கொட்டிய குளவியின் கூர்மையான முள் போன்ற உறுப்பு சில சமயம் தோலில் புதைந்திருக்கலாம். மருத்துவரின் உதவியோடு அதனை அகற்றி விட வேண்டும்.

### தேனீ

தேனீ கொட்டிய இடத்தை நன்கு கழுவி கொட்டிய கொடுக்கு இருந்தால் அதை நீக்கி ஐஸ் ஒத்தடம் கொடுப்பதே முதலுதவி. ஈர்ப்பு வலிக்கு எதிரான நீர்ப்பீடனம் (Tetanus toxiod) போட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகி இருந்தால் தேனீ கொட்டிய சில தினங்களுக்கு உள்ளாகவே அந்த ஊசியை மறுபடியும் போட்டுக் கொள்ள வேண்டும். சில



சமயங்களில் கொட்டிய இடத்தில் தொற்று ஏற்பட்டுச் சீழ் பிடிக்கலாம். உடனடியாக மருத்துவர் ஆலோசனைப்படி ஆன்டிபயோடிக் மருந்துகளை எடுத்துக் கொள்ளவும்.

குளவிக் கூடுகளையோ தேன் கூட்டையோ தேவை இல்லாமல் கலைக்கக் கூடாது. பழமரங்கள், பூந்தோட்டங்கள் நிறைந்த பகுதிகளில் தேனீ மற்றும் குளவிகள் நடமாட்டம் அதிகமாக இருக்கும். எனவே, மேற்படி இடங்களுக்குச் செல்லும் போது அடர் வண்ணத்திலான ஆடைகள் அணிந்து செல்ல வேண்டாம். வாசனைத் திரவியங்களையும் தவிர்க்க வேண்டும். முழுக்கை மற்றும் முழுக்கால் ஆடைகளுடன் தகுந்த காலணிகளையும் அணிந்து செல்வதே பாதுகாப்பானது.

# புலிகள் ஆதரவாளர்களால் நாடுகளுக்கு அச்சுறுத்தல்

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பாவில் உள்ள விடுதலைப்புலிகள் மற்றும் விடுதலைப்புலிகள் ஆதரவு சக்திகளால் இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் அச்சுறுத்தல் உள்ளதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரான்சில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளரான பரிதி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இலங்கை பாதுகாப்பு அமைச்சு இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவு சக்திகள் ஐரோப்பாவில் எவ்வாறு செயற்படுகின்றன என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு உதாரணமாகும்.

ஐரோப்பிய மண்ணில் இவர்களின் செயற்பாடுகள் தொடர்வது இலங்கைக்கு மட்டுமன்றி உலகிற்கே அச்சுறுத்தலாக அமையும் என்றும் இலங்கை பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. (அ-2)

# வரவு செலவுத் திட்டத்தால் பெருந்தோட்ட மக்களுக்கும் இடிவிழுந்தது-வாசுதேவ தெரிவிப்பு

வரவு செலவுத்திட்டத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தனியார்துறை மற்றும் பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு சம்பள உயர்வுகளை வழங்க அரசாங்கம் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனியார்துறை ஊழியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளங்களை நிர்ணயிக்க வேண்டும் எனவும் பெருந்தோட்டத்துறை ஊழியர்களுக்கு உணவு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனைய துறைகளைச் சார்ந்தவர்களுக்கு ஏதேனும் வகையில் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும் மிகக் குறைந்த சம்பளங்களைப் பெற்றுக் கொள்ளும் [illegible] நிவாரணங்கள் [illegible] அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்ளத் தயார்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கத் தயார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கம்புறுபிட்டிய பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் லண்டன் சென்றிருந்த போது விமான நிலையம் தங்கியிருந்த ஹோட்டல் உள்ளிட்ட பல இடங்களில் தீவிரவாதிகள் தங்களது கொடிகளைக் காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

எங்களது மக்களும் இந்தப் போராட்டங்களுக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் சிங்கக் கொடிகளை ஏந்தி போராட்டம் நடத்துகின்றார்கள். போராடிய இராணுவச் சிப்பாய்கள் மட்டுமன்றி அவர்களது குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாக்க வேண்டும்.

ஊனமுற்ற நாட்டிலேயே மக்கள் வாழ்ந்து வந்தனர். தற்போது அந்த நிலைமை மாறியுள்ளது. போரை முடிவுறுத்தியதன் மூலம் எமக்கும் எமது பிள்ளைகளுக்கும் பாரியளவு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

போரை முடிவுறுத்தியமை காரணமாக சிலர் எம்மை பழிவாங்க சந்தர்ப்பம் பார்த்து காத்திருக்கின்றனர். எம்மையும் படைவீரர்களையும் சர்வதேச நீதிமன்றங்களில் ஆஜர்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

எனினும் இந்த சவால்களை முறியடிப்பதற்கும் சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்கவும் தயார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)

# மரத்தால் வீழ்ந்து ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

தென்னை மரத்தில் தேங்காய் பறிப்பதற்காக ஏறிய இளைஞன் தவறி வீழ்ந்ததில் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் கரவெட்டி துன்னாலை மேற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ரி.செல்லகுமாரன் (வயது 34) என்பவரே படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளம் அணு உலைக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கூடங்குளம் அணு உலை அபாயத்திற்கு எதிரான மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது.

இக்கவனயீர்ப்புப் போராட்டமானது எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக நடைபெறவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி இலங்கைக்கும் குறிப்பாக வட பிரதேசத்தின் மக்களுக்கும் இக்கூடங்குளம் அணு உலை மின் நிலையத்தால் அபாயங்களே உருவாகும். எனவே, இவ் அபாயம் பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்தி மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பை மக்கள் நலன்களில் அக்கறை கொண்ட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளுக்கும் சமூக அக்கறையாளர்களுக்கும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி விடுக்கின்றது.

தமிழ் நாட்டின் தென்கரையோரத்தில் இலங்கையின் வடக்கு மேற்கு பிரதேசங்களை அண்மித்ததாக நிறுவப்பட்டுள்ள கூடங்குளம் அணு உலை மின் நிலையம் இயக்கப்படவுள்ளது.

அதிலிருந்து வெளிப்படும் கதிரியக்கமானது அபாயகரமானதாகும். அதிலும் அணு உலையில் அனர்த்தம் ஏற்படும் சூழலில் பாரிய உயிரழிவுகளை எதிர்கொள்ள வேண்டியே ஏற்படும். அத்துடன் உயர் அழிவுகளை மட்டுமன்றி மண்ணிலும் கடலிலும் காற்றிலும் கலந்து கொடிய நோய்களைக் கொண்டு வரக் கூடியதுமாகும். எதிர்காலத் தலைமுறைகளுக்கும் அபாயகரமானதாகும். அதனாலேயே தமிழ் நாட்டின் கூடங்குளம் இடிந்த கரையில் மீனவர்களும் கிராமப்புற மக்களும் மற்றுமுள்ளோரும் இணைந்து கடந்த பதினைந்து மாதங்களாக கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு எதிராகப் போராடி வருகிறார்கள். அவர்களது போராட்டம் நீதியானதாகும். அம்மக்களுக்கு எமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம்.

எனவே, எமது மக்கள் சார்பான எதிர்ப்பை இக்கவனயீர்ப்புப் போராட்டம் மூலம் வெளிப்படுத்த அனைத்து ஜனநாயக இடதுசாரி முற்போக்கு மக்கள் நலன் காக்கும் கட்சிகளையும் அணி திரளுமாறு அதில் கேட்கப்பட்டுள்ளனர். (அ-2)

# நரகாசுரன் கதையை படிப்பினையாக கொள்வோம்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியாளர் சுபியான்

இன்றைய தினம் தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் அனைத்து இந்து மக்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என மாநகரசபை உறுப்பினர் பி.ஏ.எஸ்.சுபியான் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஒற்றுமைக்கு வித்திட்டு சமூக இணக்கப்பாட்டிற்கு உறுதி தரும் நன்நாளாக தர்மத்தின் உயர்வின் வெளிப்பாட்டுத் திருநாளாகவும் இத்தீபாவளிப் பண்டிகையை அனுஷ்டிப்பதற்கும் எல்லை மீறிய தீமைகள் யாவும் இறைசக்தியால் இல்லாதொழிக்கப்படுமென்பது உறுதியென்பதை உலகத்தாருக்கு உறுதிபட உணர்த்தும் நரகாசுரன் கதையை நாம் படிப்பினையாகக் கொண்டு எங்கும் தூய அன்பு, பண்பு, பாசம், நேர்மை, நீதி போன்ற உயரிய குணங்கள் மேலோங்க, ஒளிபரப்ப, நம்வாழ்வு சிறக்க, நேர்வழி பெற இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.



முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் மனித மண்டையோடுகளுக்கு மத்தியில் கல்வி கற்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையில் இன்னமும் இப்பாடசாலை புனரமைப்பு செய்யப்படாமல் இடிந்து கட்டடங்களுக்குள்ளே இருந்து மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

அதுமட்டும் இன்றி பாடசாலை சுற்றாடலில் யுத்தத்தில் இறந்தவர்களின் என நம்பப்படும் மண்டையோடுகள் மனித எலும்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இவற்றுக்கு மத்தியிலேயே இம் மாணவர்கள் தமது கல்வியை தொடர்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

# 13 ஆவது திருத்தத்தின் குறைகளை திருத்த முயற்சி செய்யுங்கள்

## இரத்துச் செய்ய வேண்டாம் என்கிறார் நவீன்

(கொழும்பு)

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வது நாட்டுக்கு நன்மையான விடயமல்ல என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ, இந்தத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனக் கூறவில்லை. சிறிய கட்சிகளின் தலைவர்களே இதனை இரத்துச் செய்யுமாறு கூறுகின்றனர்.


13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது ஐக்கிய தேசியக் கட்சியின் 6 ஆயிரம் பேரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 5 ஆயிரம் பேரும் கொலை செய்யப்பட்டிருந்தனர். 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தில் குறைகள் இருக்கின்றன.

அதனை திருத்த வேண்டும். அதனை விடுத்து 13 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்தை இரத்துச் செய்தால் அது நாட்டுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை எதிர்ப்பதால் எந்த பயனும் இல்லை என ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானதல்ல.

நாட்டில் உள்ள சட்டத்திற்கு அமைய நிறைவேற்றப்பட்டு நாடாளுமன்றத்தின் சபாநாயகர் கையெழுத்திட்ட பின்னர் அதன் செல்லுபடித்தன்மை குறித்து கேள்வி எழுப்ப முடியாது எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)



உரும்பிராய் கிட்ஸ் பார்க் மூன்று வயது மழலைகளின் தமிழ்த்தினவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிட்ஸ் பார்க் தலைவர் அ.பஞ்சலிங்கம் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# சிறைச்சாலை சேதங்களை புனரமைக்க 60 இலட்சம் செலவாகுமென மதிப்பீடு

## சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் நிலவிய அமைதியின்மை காரணமாக 100 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை புனரமைப்பதற்காக மாத்திரம் சுமார் 60 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பீ.டபிள்யூ கொடிப்பிலி கூறினார்.

சேதவிபரங்கள் குறித்து சரியான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக பொறியியலாளர்களை நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை காணாமல் போயுள்ள ரி-56 ரக துப்பாக்கியொன்று, கைத்துப்பாக்கியொன்று மற்றும் மேலும் இரண்டு துப்பாக்கிகளைத் தேடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலை ஆயுத களஞ்சியம் உடைக்கப்பட்டு அதிலிருந்து 82 ஆயுதங்கள் கைதிகளால் அபகரிக்கப்பட்டிருந்ததாகவும் அவற்றில் நான்கு ஆயுதங்களைத் தவிர ஏனைய அனைத்து ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்நிலையில் காணாமல் போயுள்ள கைதிகள் தொடர்பில் இது வரை பல்வேறு தகவல்கள் அறியக் கிடைத்துள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதுதவிர சம்பவத்தில் உயிரிழந்த எட்டு கைதிகள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸ் தலைமையகம் குறிப்பிடுகின்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடைச் சிறைச்சாலை சம்பவம் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை மோதல் தொடர்பில் தொலைபேசி அழைப்புக்களின் ஊடாக விசாரணைகள் நடத்தப்பட உள்ளது.

மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய சிறைக்கைதிகள் மற்றும் விசேட அதிரடிப் படை உத்தியோகத்தர்களின் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளது.

கைதிகள் தப்பிச் செல்வதற்கு எவ்வாறு வான்களும், முச்சக்கர வண்டிகளும் குறித்த இடத்திற்கு கொண்டு வரப்பட்டன என்பது குறித்தும் விசாரணைகள் நடத்தப்பட உள் ளன. ஆயுதம் தாங்கிய சில கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர்களை கைது செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தப்பிச் சென்றவர்களின் முழுமையான விபரங்கள் இன்னமும் தயாரிக்கப்படவி ல்லை என சிறைச்சாலைத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், தமிழீழ விடுதலைப் புலிக் கைதிகள் எவரும் சம்பவத்தில் தப்பிச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை மோதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்த மூவர் அடங்கிய குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் நடந்த மோதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட களு துஷார மற்றும் கொண்ண கபில ஆகியோர் வழிநடத்தியவர்கள் என புலனாய்வுப் பிரி வினரின் விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

கைதிகளை கட்டுப்படுத்த அதிரடிப் படை யினர் முயற்சித்தபோது, கைதிகளை கட்டுப் படுத்த முடியும் எனவும் உடனடியாக சிறைச் சாலையில் இருந்து வெளியேறுமாறு சிறைச் சாலை அதிகாரிகள் சிலர், அதிரடிப் படையி னரிடம் கூறியுள்ளனர்.

இதனையடுத்து அதிரடிப் படையினர், சிறைச்சாலையில் இருந்து வெளியேறிய போதிலும், கைதிகள் ஆயுத களஞ்சியத்தை உடைத்து, அதில் இருந்த ஆயுதங்களை எடுத்து, அதிரடிப் படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

9 கைதிகள் முச்சக்கர வண்டி ஒன்றில் ஏறி, துப்பாக்கியை கொண்டு தாக்குதல் நடத்தி, சிறைச்சாலைக்கு வெளியில் வந்து தாக்குதல் நடத்தியதில், அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி, ரணவன காயமடைந் துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# தொற்றா நோய்களின் ஆண்டாகிறது 2013

2013 ஆம் ஆண்டு தொற்றா நோய்க ளின் ஆண்டு என பெயரிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தொற்றா நோய்த் தாக்கம் காரணமாக உலக நாடுகள் பெரும் பொருளாதார பிரச்சினைக்கு முகங் கொடுத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலைமை இலங்கைக்கு மட்டுமல்ல எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்று கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (அ - 9)



கிளி / வட்டக்கச்சி மகாவித்தியாலத்தில் அண்மையில் நவராத்திரி தின நிகழ்வுகள் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆரம்பக் கல்வி மாணவிகளின் நடன நிகழ்வை படத்தில் காணலாம்.

படம்:- வட்டக்கச்சி செய்தியாளர்

# டெங்கு காய்ச்சலுக்கு மருந்து கண்டுபிடிப்பு

(கொழும்பு)

டெங்கு காய்ச்சிலிற்கான மருந்தினை ஆயுர்வேத சிகிச்சை முறையின் மூலம் வைத் தியர் ஒருவர் கண்டுபிடித்ததாக தெரிவிக்கப் படுகிறது.

அழுத்வல, பெருமானகொட பிரதேசத் தைச் சேர்ந்த வைத்தியர் தரங்க குமாரி விக்கிரமசூரிய என்பவரே மருந்தினை கண்டு பிடித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஆயுர்வேத பரிசோதனையினை மேற் கொண்டு இரண்டு வருடங்களின் பின்னர், இம்மருந்தினை கண்டுபிடித்துள்ளதாகவும், குறித்த மீருந்து தொடர்பாக தேசிய மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அவ் வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளி இம்மருந்தினை ஒரு வருடங்கள் பாவித்தால் நோயை குணப்படுத்த முடியும் என குறித்த வைத்தியர் தெரிவித்தார்.

இம்மருந்தினை சந்தைக்குட்படுத்துவது குறித்து வைத்தியர் சங்கத்திற்கு முன் வைக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ - 9)

# தீபாவளி திருநாளில் தமிழர்கள் தீர்வினை எதிர்பார்க்கின்றனர்

## பிரபா எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தீபாவளி திருநாளில் தமக்குரிய விடி வினை பெற்றுக் கொள்ள முடியுமா என்ற எதிர்பார்ப்புடன் இருக்கும் மக்களுக்கு தனது தீபாவளி வாழ்த்துக்களை தெரிவிப்பதாக ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ருமான பிரபா கணேசன் ஊடகங்களுக்கு தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

அச்செய்தியில் அவர் கூறியிருப்பவை வருமாறு, இன்றைய காலகட்டத்தில் நாட் டில் வாழும் தமிழ் மக்கள் குழம்பிப் போயுள் ளனர். அவர்கள் மட்டுமின்றி தமிழ் அரசியல் தலைவர்களும் குழம்பி நிற்கின்றனர்.

ஸ்தம்பிதம் அடைந்துள்ள இனப்பிரச்சி னைக்கான தீர்வு எவ்விதம் அமையப் போகி ன்றது என்று தெரியாமல் திகைத்து நிற் கின்றோம்.

13ஆவது சரத்து ஒழிக்கப்பட்டு விடுமா அதன் பின்பு வரப் போவதாக பயமுறுத்திக் கொண்டிருக்கும் 19ஆவது சரத்தின் மூலமாக இருப்பதை இழந்து விடுவோமோ அல்லது சர்வதேச தலையீட்டின் மூலமாக 19இல் அதிகளவு அதிகாரப் பகிர்வைப் பெற்று விடு வோமோ என்று புரியாத நிலையில் தீபாவளி தினத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

எது எப்படி இருப்பினும் நரகாசுரனை ஒழித்து விடுதலையைப் பெற்றுக் கொண் டதை கொண்டாடும் இத்தீபாவளி திருநா ளையும் தமிழ் மக்கள் பல எதிர்பார்ப்புடன் கொண்டாடுகிறார்கள்.

நல்லது நடக்கும் என்று எதிர்பார்க்கும் எமது மக்களின் எண்ணத்தை இத்தீபாவளி திருநாள் நிறைவேற்றி வைக்கும் என்ற நம் பிக்கையுடன் முன்னெடுத்து செல்வோம்.

எண்ணங்கள் புனிதமானால் எதிர்பார்ப் புகள் நிச்சயம் நிறைவேறும் என தனது செய்தியில் குறிப்பிட்டார். (அ -2)


# கோம்பயன்மணல் கேணி பற்றைகளால் சூழ்ந்துள்ளது

## அச்சத்துடன் நடமாடும் மக்கள்

யாழ். வண்ணார்பண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்திலுள்ள குளம் நீண்ட காலமாக புனரமைக்கப்படாது உள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது குறித்த குளத்தினை பழைய நிர்வாகத்திடமிருந்து 25 வருட குத்தகைக்கு யாழ். மாநகரசபை எடுத்து உள்ளது.

இம் மயானத்தில் தற்போது மின்சார தகனத்திற்காக கட்டட வேலைகளை முன்னெ டுத்துள்ள நிலையில் குறித்த மயானத்தில் காணப்படுகின்ற பாழடைந்த குளம் பற்றை களினால் சூழ்ந்து அழிவடையும் நிலையில் உள்ளது. அதனை திருத்தி தருமாறு அப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



குறித்த குளம் பாம்புகளின் உறைவிட மாக காணப்படுவதாகவும் இதனால் இங்கு தகனக் கிரியைகளுக்கு வருவோர் பயப்பீதி யுடனே வர வேண்டி உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ - 4)

# சுவரில் துளையிட்டே கைதிகள் தப்பித்தனர்

தப்பிச் சென்றவர்களின் எண்ணிக் கையை சிறை அதிகாரிகள் இன்னும் சரியாக அறிவிக்கவில்லை. ஆயினும் தமி ழீழ விடுதலை புலிகளான சந்தேக நபர்கள் தப்பிச் செல்லவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சிறையிலிருந்தவர்கள் தப்பிச் செல்ல முயன்றபோது அவ்விடத்துக்கு முச்சக்கர வண்டியும், வானும் எவ்வாறு வந்தன என்பதையிட்டும் விசாரணைகள் இடம்பெறு கின்றன. இருப்பினும் இந்த முயற்சிகள் தோல்வி கண்டன.

கலவரத்தில் தப்பிச் சென்றவர்களில் ஏழு பேர் பொலிஸில் சரணடைந்துள்ளனர். அத்துடன் தப்பிச் சென்றவர்களை தேடும் நடவடிக்கைகள் பொரளை மற்றும் தெமட்ட கொடை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப் படுகின்றன.

எல் மண்டபத்திலிருந்த கைதிகள் சுவரில் ஒரு துவாரத்தையிட்டு அதனூடாக தப்பி போனதாக விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. இதுவே ஆயுத மோதலுக்கு வழிவகுத்துள்ளது என கூறப்படுகின்றது.

இங்கிருந்து கடுங் குற்றமிழைத்த பலர் தப்பிச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப் படுகிறது. (அ- 2)

# இலங்கையில் வாக்கெடுப்பு நடத்த மத்திய அரசு ஒத்துழைக்க வேண்டும் எச்சரிக்கிறது தி.மு.க.

இலங்கையில் பொது வாக்கெடுப்பு நடத்த இந்தியா அழுத்தம் தர வேண்டும். இதற்கு, மத்திய அரசு உறுதுணையாக இருந்தால் தான், நாமும் அவர்களுக்கு உறுதுணை யாக இருக்க முடியும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி மறைமுகமாக மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டெசோ மாநாட்டு தீர்மான நகலை ஐ.நா. சபையில் வழங்கிவிட்டு நேற்று முன்தினம் சென்னை வந்த தி.மு.க பொருளாளர் ஸ்டாலின், டி.ஆர்.பாலு ஆகியோருக்கு பாராட்டு விழா சென்னை அறிவாலயத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் தி.மு.க தலைவர் கருணா நிதி பங்கேற்று உரையாற்றுகையில், டெசோ குழந்தை வளர ஆரம்பமாகிய காலகட்டத்தில், இலங்கை தமிழர்களுக்கு விடிவு ஏற்படாதா என்ற ஏக்கத்தோடு ஐ.நா.சபையிடம் ஸ்டா லினும், பாலுவும் டெசோ மாநாட்டு தீர்மா ணங்களை வழங்கியுள்ளனர்.

இலங்கை தமிழர்களை சுயமரியாதை யுடன் வாழ்வதற்கு எவ்வளவு அழுத்தம் கொடுக்கவும் தி.மு.க தயாராக இருக்கிறது.

இலங்கை தமிழர்களுக்கு விடிவு காலம் வர பொது வாக்கெடுப்பு நடத்த ஐ.நா சபை தயார்படுத்த வேண்டும்.

இந்தியாவும் அழுத்தம் கொடுக்க வேண் டும். அதற்கு மத்திய அரசு உறுதுணையாக இருந்தால்தான் நாமும் அவர்களுக்கு உறு துணையாக இருக்க முடியும் என்றார். (அ - 2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மக்கள் தூங்குகிறார்கள். அதனால் நான் விழித்திருக்கிறேன்.

—அம்பேத்கர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கண்ணா உன் கதாயுதத்தை இரவலாகத் தா! திருப்பித் தருவோம்

தசாவதாரம் எடுத்து தர்மம் காக்க இருக்கும் கண்ணபிரானுக்கு எழுதும் கருணை மடல் இது.

தேவரீர்! வைஷ்ணவத்தின் முழுமுதற் கடவுளாகவும் சிவனைத் தலைவனாகக் கொண்ட சைவத்தின் பாதுகாப்பு மந்திரியாகவும் இருக்கக் கூடிய உன் கருணைத் திறத்தை பாரதப் போரில் கண்டு வியந்தோம்.

திரௌபதியின் மானம் காத்த பேருதவி கண்டு மகிழ்ந்தோம்.

நாம் அறியா யுகத்தில் நீ எடுத்த அவதாரத்தில் நரகாசூரன் என்ற அசுரன் வதம் செய்யப்பட்டதான புராணக் கதைக்கு பழக்கப்பட்ட நாம்,

இன்றைய நாளில் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுகின்றோம்.

தீபத் திருநாளின் தத்துவம்–அதன் பொருள் அர்த்தமுடையதாக இருப்பினும், தீபாவளித் திருநாளின் கொண்டாட்டம் நரகாசூரன் வதம் செய்யப்பட்டதன் மகிழ்வைக் குறிப்பதாகும்.

நரகாசூரன் வதம் செய்யப்பட்டமை அன்றைய காலத்தில் தேவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கலாம். அதனால் அவர்கள் அதனை மகிழ்வோடு கொண்டாடி இருக்கலாம்.

ஆனால் இன்று ஈழத் தமிழர்களுக்கு இது பொருந்தவே பொருந்தாது.

ஈழத் தமிழர்களின் வாழ்வு என்பது துன்பம் நிறைந்ததாகவே இருக்கின்றது.

நவ காலத்து நரகாசூரர்கள் தமிழ் இனத்திற்கு சொல்லொணாத் துயரத்தை இழைக்கின்றனர்.

நரகாசூரர்களின் கொடூரத்தால் தமிழ் இனம் பட்டதும் படுகின்றதுமான வேதனை கண்டு நீ இரங்காதவரை,

நாங்கள் கொண்டாடும் தீபாவளித் திருநாள் என்பது காலாவதியாகிப்போன உன் கருணைக் கானதேயன்றி வேறில்லை என்று நீ உணரக்கடவாய்.

தீபாவளித் திருநாளைக் கொண்டாடுகின்றார்கள். வெடி கொளுத்துகிறார்கள் என்பதற்காக தமிழர்கள் மகிழ்வாக இருக்கிறார்கள் என்று மட்டும் நீ நினைத்து விடாதே.

எங்கள் அனுஷ்டிப்பு எல்லாம் காரணத்தோடு தான். தேவர்களின் துயரம் துடைக்க அவதாரம் எடுத்து நரகாசூரனை வதம் செய்த நீ,

துன்பத்திலும், துயரத்திலும், இழப்பிலும், தோல்வியிலும் உன்னை மறவாது நினைக்கின்ற ஈழத் தமிழர்களுக்காக நீ அவதாரம் எடுப்பாய் என்ற நம்பிக்கையில்தான் தீபங்கள் ஏற்றப்படுகின்றன.

பரந்தாமா! ஒன்பது அவதாரத்தோடு நின்பணி முடியவில்லை.

பத்தாவது அவதாரத்தை நீ விரைவாக எடுக்க வேண்டும். அது ஈழத்தமிழர்களைக் காப்பாற்றுவதற்கானதாக இருக்க வேண்டும்.

கண்ணா! எம் கருணை மனுவை ஒருகணம் பரிசீலித்துக் கொள். எங்கள் மனுவில் உனக்குத் திருப்தி இல்லையாயின் உன் கதாயுதத்தை ஒரு தடவையேனும் எங்களுக்கு இரவலாகத் தா.

அலுவல் முடிந்ததும், தர்மம் நிலைநாட்டப்பட்டதும், தமிழர் உரிமை பெற்றதும் திருப்பித் தருவோம். அதன்பின் உனக்காக எங்கள் இதயங்களில் தீபங்கள் ஏற்றப்படும்.

## கேதாரகௌரி நோன்பின் மகத்துவம்

கைலயங்கிரியின் சிகரத்தில் உமா சமேதராய் விளங்கும் பரமசிவன் பக்த கோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவ சபையை ஏற்படுத்தி அதில் வீற்றிருக்கிறார். அப்பொழுது அந்தரங்கப் பக்தராகிய பிருங்கி மகரிஷி பக்தியோடு விசித்திர நாடகமொன்றை ஆடிக் காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கிறார். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றார்கள்.

பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கிறார். பரமசிவனது அனுக்கிரகமும் பிருங்கிக்கு கிடைக்கிறது. அந்த நேரத்தில் மகரிஷி பயபக்தியுடன் பார்வதியை நீக்கிப் பரமசிவனை வலம் வந்து வணங்குகிறார்.

இதனால் பார்வதிதேவி கவலையடைந்தாள். இதனைக் கண்ணுற்ற சிவபெருமான் தேவி! சிவயோகியாகிய பிருங்கி மகரிஷி முத்திநிலையை விரும்பி நிற்பவர். அதனை அடைவதற்கு உன்னை வணங்குவதால் பிரயோசனமில்லை என்ற திடசித்தம் கொண்டார். அதனால் உன்னை விட்டு என்னை மாத்திரம் வணங்கிச் சென்றார் என்றும் விளக்கம் கூறினார்.

தேவிக்கு மேலும் கோபமுண்டாகிறது. கைலையைவிட்டு நீங்கி பூலோகத்திற்கு வருகிறாள். வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கும் பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கிறாள். அந்த இடத்தில் 12 வருடங்கள் மழையின்றிக் கிடந்த விருட்சங்கள் எல்லாம் தளிர்த்து பூத்து மணம் வீசுவதைக் கண்டு அதிசயிக்கின்றனர்.

தேவி, தாங்கள் கைலயங்கிரியை விட்டுப்பூலோகத்திற்கு எழுந்தருள காரணம் என்ன? என்று கேட்டு விடுகின்றனர். தேவியும் தான் பூலோகத்திற்கு வந்த கதையைச் சொல்கிறாள். தேவியும் ஆச்சிரமம் சென்று வால்மீகி மகரிஷி தேவிக்கென்று அமைத்துக் கொடுத்த ஆச்சிரமத்தில் நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்து மகரிஷியே பூலோகத்தில் நான் விரதமொன்று அனுஷ்டிக்க வேண்டும். இருக்குமானால் அதனை எனக்கு கூறுங்கள் என்றார்.

மகரிஷி, தாயே! தாங்கள் விரத முகத்தோடு எழுந்தருளியிருக்கின்றீர்கள். அதை விடவா பூலோகத்தில் சிறந்த விரதம் ஒன்று உண்டென்று கூறினார். தேவி புன்னகைத்து தன் விரதத்தை ஆலவிருட்சத்தின் கீழ் அமர்ந்து ஆரம்பிக்கிறாள்.

மண்ணிலே லிங்கம் பிடித்து ஈஸ்வரனாகப் பாவித்து பூஜை செய்கிறாள். 21 நாள் பூஜை நிகழ்கின்றது. 21 பழம், 21 அதிரசம், 21 வெல்ல உருண்டை, 21 சந்தன உருண்டை, 21 மஞ்சள் உருண்டை நைவேத்தியமாக வைத்துத் தூபம் காட்டி வணங்குகிறாள். 21 இழை எடுத்து தரித்து 21 முடிமுடிந்து ஈஸ்வரனை தியானம் செய்து காப்புக் கட்டுகிறாள்.

காப்பணிந்ததும் பரமசிவன் பார்வதிக்கு காட்சிகொடுத்து தேவி! உமக்கு என்ன வரம்வேண்டுமெனக் கேட்கிறார். தேவி ஈசனைப்பார்த்து உமது தேகத்தில் பாதிவேண்டுமென்று கேட்கிறாள். ஆகட்டும் என்றார் ஈஸ்வரன். என்னை நோன்பு நோற்று வரம்பெற்ற உன்னை நோக்கி யார் இந்த 21 நாளும் விரதம் அனுட்டிக்கிறார்களோ இவர்கள் உன் மூலம் சகல சௌபாக்கியங்களையும் அடைவர் என்ற வரமும் நல்கி பரமசிவன் பார்வதி சமேதராய் அர்த்தநாரீஸ்வர வடிவத்தோடு கைலயங்கிரிக்கு எழுந்தருளினார். அதிலிருந்து பூலோகவாசிகளால் கௌரிநோன்பு அனுஷ்டிக்கப்படுகிறது. இந்தக் கௌரி நோன்பு அனுஷ்டித்து கைமேல் பலன் கண்டவர்கள் பலர் இந்த விரதத்தின் அங்கங்களாக அமைந்தவை. சங்கற்பம், நைவேத்தியம், தூபம் தீபம், அர்ச்சனை, வலம் வருதல் என்பனவாகும்.



### தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்

ஆகவே இவற்றை ஒவ்வொருவரும் தாமாகவே செய்து விரதத்தை நிறைவேற்றுதல் விரும்பத்தக்கதாகும். விரும்பினால் அவரவர் இல்லங்களிலும் இதனைச் செய்து கொள்ளலாம். ஆனால் புனிதமான சூழ்நிலை அமைய வேண்டும். இலிங்கத்தின் அருகே அம்பாள் திருவுருவையும் வைத்து அலங்கரித்து பூஜை செய்தல் மேலானது. 21 நாள் இந்த விரதத்தை அனுஷ்டிக்க முடியாதவர்கள் இறுதிநாளில் எல்லாப்பூஜையையும் முடித்துக்கொள்ளலாம். ஆனால் வருடா வருடம் தொடர்ந்து அனுஷ்டிப்பதே முக்கியமானதாகும்.

## கொலைக்களங்கள் குறுந்திரைப்படமாகியது

இலங்கையின் இறுதிப் போரின் போது மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் படுகொலைகளை வைத்து தயாரிக்கப்பட்ட இலங்கையின் கொலைக் களங்கள் என்ற திரைப்படத்தை மையப்படுத்தி பிரித்தானியாவின் பட்டதாரி மாணவர்கள் நால்வர் குறுந்திரைப் படங்களை தயாரித்துள்ளனர்.

இதில் ஒரு குறுந்திரைப்படத்தை தயாரித்த கிறிஸ்டினா பிச்சி என்பவர், தாம் குறுந்திரைப்படத்தை தயாரித்த போது எந்தக் கட்டத்தையும் தேவையற்றது என்று தவிர்க்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் தயாரிக்கப்பட்ட நான்கு குறுந்திரைப்படங்களும் லண்டனில் உள்ள சர்வதேச ஆவணப்பட கண்காட்சியின் போதும் ஐரோப்பிய பல்கலைக்கழகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டன.

அதனை பெருமளவானோர் பார்த்ததாக குறுந்திரைப்படத் தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந-11)

## போதைப் பொருளுடன் பாக்.பிரஜைகள் கைது

கொழும்பு பம்பலப்பிட்டியில் 2 கிலோகிரோம் ஹெரோயின் போதைப் பொருளுடன் பாகிஸ்தான் பிரஜைகள் மூவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட 2 கிலோகிராம் போதைப் பொருட்களின் பெறுமதி 8 மில்லியன் ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் பிரஜைகள் இதற்கு முன்னர் 9 முறை இலங்கைக்கு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-11)

## ஜயலத் எம்.பி. குணமடைந்து வருகிறார்

(கொழும்பு)

மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன குணமடைந்து வருவதாக ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சவேந்திர கமகே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன மாரடைப்பு காரணமாக கடந்த வியாழக்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன வைத்தியக் கண்காணிப்பின் கீழ் இருக்கவேண்டும் எனவும் இதனால் அவர் இப்போது வைத்தியசாலையிலிருந்து வெளியேறமுடியாது எனவும் வைத்தியர் கூறினார். (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தவறுகளையும் வாழ்த்துங்கள்



அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில்எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள்.

மகத்தான செயல்களைச் செய்யவே இறைவன் நம்மைத் தேர்வு செய்கிறான். அவற்றைச் செய்து முடிப்போம் என்று உறுதியெடுங்கள்.


பசியால் நலிந்து வாழும் மக்களிடையே சென்று சமயப் பிரசாரமும் தத்துவ போதனையும் செய்வது அவர்களை அவமதிப்பதாகும்.

மிருக, மனித, தெய்வீக இயல்புகளால் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். உன்னிடமுள்ள தெய்வீகத் தன்மையை வளர்க்கக்கூடியது தான் நல்லொழுக்கம். மிருக இயல்பை அதிகரிக்கச் செய்வது தீய ஒழுக்கம்.

நீ செய்த தவறுகளை வாழ்த்து அந்தத் தவறுகள் நீ அறியாமலேயே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

வாழ்க்கையில் வெற்றிபெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஓரிடத்தில் அளவற்ற நேர்மையும் அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருக்கவேண்டும். அந்தக் குணங்கள்தாம் அவர் வாழ்க்கையில் அடைந்த சிறந்த வெற்றிகளுக்கு காரணங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தடகள விளையாட்டுப் போட்டி; கோப்பாய் ஸ்ரார் வி.க.மைதானத்தில்

(நல்லூர்)

கோப்பாய் கண்ணகை அம்மன் சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டு கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் தடகள விளையாட்டுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு ஸ்ரார் விளையாட்டுக்கழகத் தலைவர் பே. பிரியந்தன் தலைமையில் கோப்பாய் ஸ்ரர்ர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி திணைக்கள தலைமைச் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.தவநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக வடமாகாண உள்ளூராட்சி திணைக்கள பொறியியலாளர் செல்வி கோபிகா சிவகடாச்சம், கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் செ. வசந்தகுமார், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அதிபர் சு.இராசமகேந்திரன், டாக்டர் எஸ். நித்தியரூபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இன்றைய தினம் காலை 6 மணிக்கு 5 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது. பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி ரஜனி பிரதீபன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (3-134)

# மாவட்ட ரீதியான மேசைப்பந்தாட்டப் போட்டி






(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேச செயலகமும் இலங்கை மேசைப்பந்தாட்ட சம்மேளனமும் இணைந்து நடத்திய மேசைப்பந்தாட்டப்போட்டி கடந்த சனிக்கிழமை வவுனியா நகரசபை உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கமலன் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில் வவுனியா மாவட்ட அணிகளுக்கிடையிலும் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலும் தனித்தனியான போட்டிகள் இடம்பெற்றிருந்ததுடன் மாகாண மட்டப் போட்டிகளும் இடம்பெற்றன.

இப்போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், இலங்கை மேசைப்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவர் சந்தன பெரேரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (266)

# வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் சங்க மரதன் போட்டி








(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த மரதன் போட்டி கடந்த சனிக்கிழமை வவுனியா நகரசபை முன்றலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆண்கள் மற்றும் பெண்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கு பற்றிய இப்போட்டியினை ஜனாதிபதியின் இணைப்பாளர் சிவநாதன் கிசோர் ஆரம்பித்து வைத்திருந்தார். வவுனியா நகரசபை முன்றலில் ஆரம்பமான இப்போட்டி ஓமந்தை வரை சென்று மீண்டும் நகரசபை முன்றலை வந்தடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இம் மரதன் ஓட்டப் போட்டி வருடாந்தம் வவுனியா மெய்வல்லுநர் சங்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது



இலங்கை நியூசிலாந்து அணிக்கெதிரான கடைசி ஒருநாள் போட்டி மழையால் நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடிவருகிறது.

நான்கு போட்டிகள் முடிந்துள்ள நிலையில் ஐந்தாவது மற்றும் கடைசி போட்டி நேற்று அம்பாந்தோட்டை மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி களத்தடுப்பதை தெரிவு செய்தது.

இதனையடுத்து இலங்கை அணியின் தொடக்க வீரராக களமிறங்கிய உபுல் தரங்க 60 ஓட்டங்களும் அடுத்து களமிறங்கிய திரிமன்னே 17 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பின்பு களமிறங்கிய அணித் தலைவர் ஜெயவர்த்தன 24 ஓட்டங்களும் பெரேரா 11 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இலங்கை அணி 28.3 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 123 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மழை பெய்ததால் ஆட்டம் முழுமையாக கைவிடப்பட்டது.

# கிளார்க் இரட்டைச்சதம் பதிலடி கொடுத்தது ஆஸி



அவுஸ்திரேலியா - தென் ஆபிரிக்க அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது.

தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்ஸ் 450 ஓட்டங்கள் குவித்தது. ஹசிம் அம்லா 104 ஓட்டங்களும் கலிஸ் 147 ஓட்டங்களும் எடுத்தனர். பட்டின்சன் 3 விக்கெட்டும் சிடில், ஹில்பெனாஸ், லயன் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய அவுஸ்திரேலியா நேற்றுமுன்தினம் 3-வது நாள் ஆட்டத்தின் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 111 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. எட்கோவன் 49 ஓட்டங்களிலும் அணித் தலைவர் கிளார்க் 34 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நடந்தது இருவரும் தொடர்ந்து ஆடினார்கள் எட்கோவன், கிளார்க்கும் சிறப்பாக விளையாடி சதம் அடித்தனர்.

தொடக்க வீரர் எட்கோவன் முதலில் சதம் அடித்தார். இது அவரது கன்னிச் சதமாகும். அதைத் தொடர்ந்து கிளார்க் 11 பவுண்டரியுடன் 100 ஓட்டங்களை தொட்டார். அவருக்கு இது 20வது சதம் ஆகும்.

திணறிய நிலையில் இருந்த அவுஸ்திரேலிய அணியை இருவரும் தூக்கி நிறுத்தினர். 136 ஓட்டங்கள் எடுத்த நிலையில் எட்கோவன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஹஸி, கிளார்க்குடன் ஜோடி சேர்ந்து விளையாடினார். அணித் தலைவர் கிளார்க் சிறப்பாக விளையாடி 200 ஓட்டங்களை தொட்டார்.

இறுதியில் 4வது நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டை இழந்து 487 ஓட்டங்களை குவித்தது. அணித்தலைவர் கிளார்க் 218 ஓட்டங்களுடனும் ஹஸி 86 ஓட்டங்களுடனும் களத்தில் இருவரும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## கவர்ச்சிகரமான...

இதுவே என அரசாங்க தரப்பினர் கூறினார். ஆனால் அது அரசாங்கத்திற்கு வரியினால் பெரும் ஆசியும் மக்களுக்கு ஆண்டவனின் ஆசி மட்டுமே கிடைக்கும் என்றே நாங்கள் கருதுகிறோம்.

வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் போதிய வேதன உயர்வு தொடர்பில் விவாதிக்கப்பட வேண்டும் என தேசிய தொழில் சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டீ. லால் காந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள வேதன அதிகரிப்பு மூலம் சகல தரப்பு அரச சேவையாளர்களும் பல்வேறு கழிவுகளுக்குப் பின்னர் கிடைக்கப் போவது 750 ரூபாய் மட்டுமே என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த பணத்தின் மூலம் இரண்டு பால் மா பக்கட்டுக்களும் இரண்டு சிறிய தேங்காய் மட்டுமே வாங்க முடியும். அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட இந்த வேதன அறிவிப்புக் கூட அடுத்த வருடத்திலேயே மக்களைச் சென்றடையும்.

இந் நிலையில் இது குறித்து விசேட விவாதம் ஒன்று [illegible] அரசாங்கம் முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். [illegible]

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் 2013 ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், மீன் வெட்டுமிடம், கீளிச் சந்தை என்பனவற்றை 01.01.2013 தொடக்கம் 31.12.2013ம் திகதி வரைகுத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் மத்திய மரக்கறிச் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2,000.00 | 30,000.00 | 7000000.00 | |
| 2 | சுன்னாகம் சந்தை மீன் வெட்டுமிடம் | 1,000.00 | 10,000.00 | 110000.00 | |
| 3 | சுன்னாகம் மீன் சந்தை | 1,000.00 | 10,000.00 | 1000000.00 | |
| 4 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 140000.00 | |
| 5 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல 01 | 1,000.00 | 10,000.00 | 1660000.00 | 250.00 |
| 6 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 1,000.00 | 10,000.00 | 245000.00 | 250.00 |
| 7 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 40000.00 | 250.00 |
| 8 | முட்டைக்கடை இல 04 | 750.00 | 7,500.00 | 40000.00 | 250.00 |
| 9 | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை இல 05 | 1,000.00 | 10,000.00 | 1100000.00 | 250.00 |
| 10 | கோழிக்கடை இல 06 | 750.00 | 7,500.00 | 160000.00 | 250.00 |
| 11 | கோழிக்கடை இல 07 | 750.00 | 7,500.00 | 150000.00 | 250.00 |
| 12 | கோழி உரித்தல் | 750.00 | 7,500.00 | 90000.00 | 250.00 |
| 13 | பொது மலசல கூடம் (சுன்னாகம் பஸ்தரிப்பிடத்திற்கு அருகாமை) | 750.00 | 7,500.00 | 34000.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார் மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2,000.00 | 30,000.00 | 14400000.00 | |
| 2 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொள்கலத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5,000.00 | 74500.00 | 250.00 |
| 3 | இணுவில் சந்தை | 500.00 | 1,000.00 | 10,000.00 | |
| 4 | மல்வம் சந்தை | 500.00 | 5,000.00 | 44000.00 | |
| 5 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொள்கலத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும் | 1,000.00 | 10,000.00 | 248500.00 | |
| 6 | மருதனார் மடம் சந்தை பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 50000.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 138500.00 | |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 14.11.2012 - 22.11.2012 பி.ப 2.00 மணிவரை.
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 23.11.2012 நண்பகல் 12.00 மணிவரை.
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படுதல் - 23.11.2012 பி.ப 2.00 மணிக்கு.
4. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் கேள்விப்பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம்" யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
5. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்பட பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
7. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவீற்றிற்கு 12 வீதம் பெறுமதி சேர் வரியும் 2 வீதம் தேசத்தை கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திரக் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பங்குத்தொகையை 2012.12.05ம் திகதிக்கு முன்னர் செலுத்துவதுடன் மிகுதி 2/3 பங்குத் தொகைக்கு வங்கியில் தங்கள் பெயரில் வைப்புச் செய்தமைக்கான ஆதாரங்களை சமர்ப்பித்து ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். ஏனைய சந்தைகள் இறைச்சி, கருவாட்டுக்கடைகளுக்குமுரிய சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்கு தொகையை 2012.12.05 ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
9. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4 வீதத்திற்கு மேல் வரி அறவிடக்கூடாது.
10. இறைச்சிக்காக கன்று ஈனக்கூடிய பசுக்களையோ, மறியாடுகளையோ, அறுப்பது தடை செய்யப்படும் எனினும் கன்று ஈனமுடியாத பிரயோசனமற்றது என மிருகவைத்தியர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மாடு, ஆடுகளை அறுப்பதற்கு அனுமதி வழங்க முடியும்.
11. பொது மலசலக்கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக்கூடாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணங்காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடைக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர் குறிப்பிட்ட இடத்தில் காணி உரிமையாளர்களின் சம்மதக்கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
14. ஆகக் குறைந்தது கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
15. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
16. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தி. பிரகாஷ்
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(C-1503)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத இலங்...

பொன்றை நடத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு உலகளாவிய ரீதியாக வரும் சட்டவிரோத குடியேறிகளின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் இருப்பதால் அரசாங்கம் அவர்களை அவர்களது சொந்த நாடுகளுக்கு அனுப்ப துரித நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஓகஸ்ட் 13ம் திகதி முதல் இன்று வரையான காலப்பகுதியினுள் 255 பேர் திருப்பியனுப்பப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகள் சாசனம் மற்றும் அவுஸ்திரேலிய குடிவரவு சட்டங்களுக்கு அமையவே அவுஸ்திரேலியாவிற்கு வருபவர்கள் தனித்தனியாக விசாரிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் அவுஸ்திரேலிய சட்டங்களுக்கு அமைய செயற்பட்த் தவறுபவர்களை மீள திருப்பியனுப்ப முடியும் எனவும் நியாயமான புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்றும் அவுஸ்திரேலிய தெற்காசிய பிராந்திய குடிவரவு இயக்குநர் ஜோஸ் அல்வாரிஸ் தெரிவித்துள்ளார். (ந-11)

எமது அன்பு மாணவர்களுக்கு எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

IELTS
BRITISH COUNCIL

IELTS FOR UK
STUDENT VISA APPLICANTS



1. Examination Preparation Course Provider For British Council.
2. Materials approved by British Council which are quite new including Cambridge 8
3. Free IELTS pack & Mock Exams

We Provide

02.02.2013
IELTS
இல் யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள் நடைபெறும்.



அதற்கு ஆயத்தப்படுத்தும் வகுப்பு

CAMBRIDGE ESOL CERTIFIED TRAINER
IELTS Registration Centre For British Council

| | |
|---|---|
| Course Schedule | Sat & Sun |
| Duration | 10 Weeks |
| Time | 8.30 to 11.30 |

வகுப்புக்கள் ஆரம்பம்
17.11.2012

For registration and further details contact
CITY COLLEGE OF ENGLISH
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 2220384 / 077 8803887
(சி-1495)

# 10 ஆண்டுகளுக்கு...

பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களில் 40 சதவீதமானோர் அங்கு மீள்குடியேற்றப்பட்டுவிட்டதாகவும் அங்கு தொடர்ந்தும் மீள்குடியேற்றம் நடந்து வருவதால் இந்த மனுக்களை தொடர்ந்து விசாரணை செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் அரச தரப்பு சட்டத்தரணி வாதிட்டார்.

இதனை எதிர்த்து வாதிட்ட மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணி, பலாலி பிரதேசத்தை அதியுயர் பாதுகாப்பு வலயமாக அரசு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கவில்லை என்றும் அதனால் அந்தப் பகுதியை அதியுயர்பாதுகாப்பு வலயமாக கருதி அங்கு இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதற்கு சட்டரீதியான அங்கீகாரம் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதனால் 60 வீதத்துக்கும் அதிகமான விவசாயிகளும் 30 சதவீதத்துக்கும் அதிகமான மீனவர்களும் தமது தொழில்களை இழந்துள்ளனர். அரசு கூறுகின்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன என்று மனுதாரர் தரப்பு சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

எனவே மக்கள் தமது சொந்த வதிவிடங்களுக்குச் சென்று வாழ்வதற்கு அனுமதி வழங்கும் தீர்ப்பை வழங்குமாறு மனுதாரர்கள் தரப்பு கேட்டுக்கொண்டது.

இந்த வாதங்களை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்ற நீதியரசர்கள், வழக்கை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அனுமதி வழங்கினர்.

இதன்படி வழக்கு விசாரணைகளை அடுத்த வருடம் மார்ச் 11ம் திகதி வரை ஒத்திவைத்த நீதிமன்றம் அந்த தினத்துக்குள் அரசதரப்பு ஆட்சேபனைகளை முன்வைக்குமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இராணுவ தளபதி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. (ந-11)

# விசாரணை...

அறிவித்துள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆளும் கட்சி சார்பாக ஐந்து உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக இரண்டு பேரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனநாயக தேசிய கூட்டணி சார்பாக தலா ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ந-11)

# இலங்கை...

செய்துள்ளார்.

இக் கண்காட்சியானது சீனாவின் தெற்கு நகரமான ஷுஹையில் நடைபெறுகிறது. இக் கண்காட்சியில் ஏராளமான நவீன போர்த் தளபாடங்கள் மற்றும் புதியரக தாக்குதல் ஹெலிகொப்டர்கள் உள்ளிட்ட பல முக்கிய பாதுகாப்பு உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

வேலையாட்கள் தேவை

அல்பம் டிசைனிங் தெரிந்த பெண் பிள்ளைகள் உடன் வேலைக்குத் தேவை. தங்கள் Sample Designing Page களுடன் எதிர்வரும் வியாழக்கிழமை 16.11.2012 அன்று நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு
Creative Desk
83, Uduvil Road, Manipay.
077 777 8529 (952)

# வெலிக்...

பட்ட ஆயுதங்களின் மூலம் சிறைக் கைதிகள் பொதுமக்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்த முனைந்தபோதே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

கலகத்தில் ஈடுபட்ட கைதிகள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கில் சிறைக்குள் செல்லும் எண்ணத்தை இராணுவத்தினர் கொண்டிருக்கவில்லை. அவ்வாறு செய்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 4000 சிறைக் கைதிகளின் நிலை அபாயகரமானதாக அமைந்திருக்க சாத்தியமிருந்தது. அத்துடன் கைதிகள் தப்பிச் செல்லவும் வழியிருந்தது.

எனவே உரிய வகையில் திட்டமிட்டே இராணுவத்தினர் செயற்பட்டதாக வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# மாபிளை...

கொடுத்து விட்டு தாய் சென்றுள்ளார். இச்சந்தர்ப்பத்தில் மாபிளை விழுங்கி பிள்ளை சம்பவ இடத்திலேயே துடிதுடித்து இறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிள்ளையின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-11)

Bajaj வாடிக்கையாளர்களுக்கும் எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது உளம் நிறைந்த இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

RRS Motor Engineers



டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அங்கீகாரம் பெற்ற
உதிரிப்பாக விற்பனையாளரும் சேவை முகவரும்



BAJAJ

Bajaj மோட்டார் சைக்கிள், ஆட்டோ வாகனங்களுக்குரிய இலவச சேவையினையும் உத்தரவாத சேவையினையும் வழங்கும்

றஞ்சிற் மோட்டோர்ஸ்
றஞ்சிற் றிப்பியரிங் & சேவிஸ் சென்ரர்
286 யாழ்.வீதி. மானிப்பாய்.

Ranjit Mortors Ranjit Repairing &Service Center
T.P: 0773107549, 0772269883,
Service Station: 021 373 7808 Spare Parts: 021 2255228

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

மயில்







அழகுக்கலை நிலையம் &
போட்டோ, வீடியோ
Try Once

பேசியல், ஐசிங், பலவகை மேக்கப், கெயார் ட்ரெஸ்ஸிங்,
பெடிக்கியூர், மெனிக்கியூர், றீ பொன்டிங், ஸ்ரெயிற்னிங்
Wedding Makeup Special Packages are available

வீரபத்திரர் வீதி.
கோண்டாவில் வடக்கு.
077 691 4123

137, தபால் பெட்டிச்சந்தி.
பலாலி வீதி. திருநெல்வேலி.
077 474 9101

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.